Koviloor Digital Library

உ

12521

திருச்சிற்றம்பலம்

பன்னிரு திருமுறைத் திரட்டு

ACCNO:12521

Koviloor Digital Library

Koviloor Digital Library

5-5

உ

திருச்சிற்றம்பலம்

பன்னிரு திருமுறைத் திரட்டு

தொகுத்தவர் :

தெய்வத்திரு

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

...OOR ANDAVAR
A. No. 12521
LIBRARY, KOVILOOR

குகஸ்ரீ வாரியார் பதிப்பகம்
107, சிங்கண்ண செட்டித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 2.
போன் : 835666

முதற்பதிப்பு : 1996

விலை : ரூ. 12-00

Koviloor Digital Library

முன்னுரை

தமிழ் மறையாகிய திருமுறைப் பதிகங்கள் கொண்ட இத் திரட்டு ஏனோரும் ஓதி உய்யுமாறு திருவருள் துணையால் வெளிவருகின்றது.

''அருமறையைச் சிச்சிலிப்பண் டருந்தத் தேடும்
அதுபோலன் றிதுஎன்றும் உளதாம் உண்மைப்
பரபதமும் தற்பதமும் பரனே யன்றிப்
பலரில்லை யென்றெழுதும் பனுவல் பாரின்
எரியினிடை வேவாதாற் றெதிரே யோடும்
என்புக்கும் உயிர்கொடுக்கும் இடுநஞ் சாற்றும்
கரியைவளை விக்கும்கன் மிதக்கப் பண்ணும்
கராமதலை கரையிலுறக் காற்றுங் காணே''

என்று திருமுறை கண்ட புராணத்தில் கூறுமாறு எண்ணில் லாத பெருமைகளையுடைய திருமுறைப் பதிகங்களை அனைவரும் நாள்தோறும் ஓதி, பிறவிப் பெருங் கடலை நீந்திப் பேரானந்தப் பெருவாழ்வு பெறுவார்களாக.

அன்பன்,

கிருபானந்தவாரி

Koviloor Digital Library

முருகா

பதிப்புரை

கருமுறை தீர்க்கும் பெருமுறைகள்தாம் நம் திருமுறைகள், ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கும், தேனினும் இனிய தெய்வத் தமிழ்ப் பாசுரங்களான இத்திருமுறைகள் பன்னிரண்டாகப் பகுக்கப் பெற்றுள்ளன.

இத்திருமுறைக் கடலில் திளைத்த தெய்வத்திரு திருமுருக **கிருபானந்த வாரியார்** சுவாமிகள், தானதிகம் போற்றும் பாடல்களில் சிலவற்றைத் தொகுத்துப் பாராயணத்துக்கு என பரிமாறியுள்ளார், வானதித் தீர்த்தத்தைச் சிறு செம்பில் வார்த்துக் கொடுப்பதைப்போல.

விரிகிரண ஒளிவீசும் தினகரனைப்போல், திரிகரண சுத்தி தரும் இத்திருமுறைத் திரட்டினை உலகோர் ஓதி உய்வு பெறுவார்களாக!

- **கோ. தீபா**

குகஸ்ரீ வாரியார் பதிப்பகம்

Koviloor Digital Library

நால்வர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த
புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில்
அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர்
வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத
வூரர்திருத் தாள்போற்றி.

Koviloor Digital Library

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

சமர சூரபன் மாவைத்த டிந்தவேற்
குமரன் தாதைநற் கோழம்ப மேவிய
அமரர் கோவினுக் கன்புடைத் தொண்டர்கள்
அமர லோகம தாளுடை யார்களே.

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

பன்னிரு திருமுறைத் திரட்டு

திருஞானசம்பந்த சுவாமிகள்

முதல் திருமுறை

திருப்பிரமபுரம் பண்-நட்டபாடை

தோடுடையசெவி யன்விடையேறியோர்
தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசிஎன்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந்
தேத்த அருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய
பெம்மானிவ னன்றே. 1

முற்றலாமையிள நாகமோடேன
முளைக்கொம்பவை பூண்டு
வற்றலோடுகல னாப்பலிதேர்ந்தென
துள்ளங்கவர் கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல்
கையால்தொழு தேத்தப்
பெற்றம்ஊர்ந்த பிர மாபுரம்மேவிய
பெம்மானிவ னன்றே. 2

Koviloor Digital Library

ஒருமைபெண்மையுடை யன்சடையன் விடை
 யூரும்இவ னென்ன
அருமையாகவுரை செய்யஅமர்ந்தென
 துள்ளங்கவர் கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர்
 காலம்இது வென்னப்
பெருமைபெற்ற பிர மாபுரம்மேவிய
 பெம்மானிவ னன்றே. 3

அருநெறியமறை வல்லமுனியகன்
 பொய்கையலர் மேய
பெருநெறியபிர மாபுரம்மேவிய
 பெம்மானிவன் றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம்
 பந்தன் உரை செய்த
திருநெறியதமிழ் வல்லவர் தொல்வினை
 தீர்தல்எளி தாமே. 4

திருவேணுபுரம் பண்-நட்டபாடை

வண்டார்குழ லரிவையொடும் பிரியாவகை பாகம்
பெண்டான்மிக ஆனான்பிறைச் சென்னிப்பெரு மானூர்
தண்டாமரை மலராளுறை தவளம்நெடு மாடம்
விண்டாங்குவ போலும்மிகு வேணுபுரம் அதுவே. 5

Koviloor Digital Library

படைப்பும்நிலை யிறுதிப்பயன் பருமையொடு நேர்மை
கிடைப்பல்கண முடையான்கிறி பூதப்படை யானூர்
புடைப்பாளையின் கமுகின்னொடு புன்னைமலர் நாற்றம்
விடைத்தேவரு தென்றல்மிகு வேணுபுரம் அதுவே. 6

வேதத்தொலி யானும்மிகு வேணுபுரந் தன்னைப்
பாதத்தினின் மனம்வைத்தெழு பந்தன்தன பாடல்
ஏதத்தினை இல்லாஇவை பத்தும்இசை வல்லார்
கேதத்தினை இல்லார்சிவ கெதியைப்பெறு வாரே. 7

திருவண்ணாமலை பண்-நட்டபாடை

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே. 8

தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுவல்மிசை சிறுநுண்துளி சிதற
ஆமாம்பிணை யணையும்பொழில் அண்ணாமலை அண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி நினைவார்வினை யிலரே. 9

பெருகும்புனல் அண்ணாமலை பிறைசேர்கடல் நஞ்சைப்
பருகுந்தனை துணிவார்பொடி அணிவாரது பருகிக்
கருகும்மிட றுடையார்கமழ் சடையார்கழல் பரவி
உருகும்மனம் உடையார்தமக் குறுநோயடை யாவே 10

வெம்புந்திய கதிரோன்ஒளி விலகும்விரி சாரல்
அம்புந்திமூ வெயிலெய்தவன் அண்ணாமலை யதனைக்

Kovilor Digital Library

கொம்புந்துவ குயிலாலுவ குளிர்காழியுள் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவர் அடிபேணுதல் தவமே. 11

திருக்கோலக்கா பண்-தக்கராகம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவமென்கொலோ. 12

பெண்டான் பாக மாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக் காவு கோயிலாக்
கண்டான் பாதங் கையாற் கூப்பவே
உண்டான் நஞ்சை உலக முய்யவே, 13

பூணற் பொறிகொள் அரவும் புன்சடை
கோணற் பிறையன் குழகன் கோலக்கா
மாணப் பாடி மறைவல் லானையே
பேணப் பறையும் பிணிக ளானவே. 14

நலங்கொள் காழி ஞானசம் பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோய் ஓங்கி வாழ்வரே. 15

திருக்கோளிலி பண்-பழந்தக்க ராகம்

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம் மடநெஞ்சே அரன்நாமம்
கேளாய்நம் கிளைகிளைக்கும் கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்கு மவன் கோளிலியெம் பெருமானே. 16.

Koviloor Digital Library

நன்றுநகு நாண்மலரால் நல்லிருக்கு மந்திரங்கொண்
டொன்றிவழி பாடுசெயல் உற்றவன்றன் ஓங்குயிர்மேல்
கன்றிவரு காலனுயிர் கண்டவனுக் கன்றளித்தான்
கொன்றைமலர் பொன்றிகழுங் கோளிலியெம் பெருமானே. 17

திருநள்ளாறு — பண்-பழந்தக்கராகம்

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார் தோலுடையன் கோவண ஆடையின் மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 18

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கிய தாழ்சடையன்
நண்புநல்லார் மல்குகாழி ஞானசம் பந்தன்நல்ல
பண்புநள்ளா றேத்துபாடல் பத்தும் இவைவல்லார்
உண்புநீங்கி வானவரோ டுலகிலுறை வாரே. 19

திருவலிவலம் — பண்-பழந்தக்கராகம்

தாயுநீயே தந்தைநீயே சங்கரனே யடியேன்
ஆயுநின்பால் அன்புசெய்வான் ஆதரிக்கின் றதுள்ளம்
ஆயமாய காயந்தன்னுள் ஐவர்நின்றொன் றலொட்டார்
மாயமேயென் றஞ்சுகின்றேன் வலிவலம்மே யவனே. 20

திருத்தூங்கனை மாடம் — பண்-பழந்தக்கராகம்

பன்னீர்மை குன்றிச் செவிகேட்பிலா
படர்நோக் கிறகண் பவளந்நிற,
நன்னீர்மை குன்றித் திரைதோலொடு
நரைதோன் றுங்காலம் நமக்காதல்முன்,

Kovilnoor Digital Library

பொன்னீர்மை துன்றப் புறத்தோன்றுநற்
புனல்பொதிந்தபுன் சடையினான் உறையும்,
தொன்னீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே, 21

பல்வீழ்ந்து நாத்தளர்ந்து மெய்யில்வாடிப்
பழிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்,
இல்சூ ழிடங்கருதி நின்றீரெல்லாம்
இறையே பிரியா தெழுந்துபோதும்,
கல்சூழரக்கன் கதறச் செய்தான்
காதலியுந் தானுங் கருதிவாழும்
தொல்சீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே, 22

நோயும் பிணியும் அருந்துயரமும்
நுகருடைய வாழ்க்கை யொழியத்தவம்,
வாயும் மனங்கருதி நின்றீரெல்லாம்
மலர்மிசைய நான்முகனும் மண்ணும் விண்ணும்
தாய அடியளந்தான் காணமாட்டாத்
தலைவர்க் கிடம்போலுந் தண்சோலைவிண்
தோயுங் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே. 23

பகடூர் பசிநலிய நோய்வருதலாற்
பழிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்,
முகடூர் மயிர்கடிந்த செய்கையாரும்
மூடுதுவ ராடையரும் நாடிச் சொன்ன,

Koviloor Digital Library

திகழ்தீர்ந்த பொய்ம்மொழி கள்தேறவேண்டா
    திருந்திழையுந் தானும் பொருந்திவாழும்
துகள்தீர் கடந்தைத் தடங்கோயில்சேர்
    தூங்கானை மாடம் தொழுமின்களே. 24

திருப்பழனம் பண் - தக்கேசி

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாஎனவுந் நக்காஎனவும் நம்பாஎனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே. 25

வேய்முத்தோங்கி விரைமுன் பரக்கும் வேணுபுரந்தன்னுள்
நாவுய்த்தனைய திறலான்மிக்க ஞான சம்பந்தன்
பேசற்கினிய பாடல்பயிலும் பெருமான் பழனத்தை
வாயிற்பொலிந்த மாலைபத்தும் வல்லார் நல்லாரே. 26

திருவண்ணாமலை பண் - தக்கேசி

பூவார்மலர்கொண்ட டியார்தொழுவார்
    புகழ்வார் வானோர்கள்
மூவார்புரங்கள் எரித்தஅன்று
    மூவர்க்கருள் செய்தார்
தூமாமழைநின் றதிரவெருவித்
    தொறுவின் நிரையோடும்
ஆமாம்பிணைவந் தணையுஞ்சாரல்
    அண்ணாமலையாரே. 27

Koviloor Digital Library

எனைத்தோரூழி யடியாரேத்த இமையோர் பெருமானார்
நினைத்துத் தொழுவார் பாவந்தீர்க்கும் நிமலருறை கோயில்
கனைத்தமேதி காணாதாயன் கைம்மேல் குழல்ஊத
அனைத்துஞ்சென்று திரளுஞ்சாரல் அண்ணாமலையாரே. 28

அல்லாடரவம் இயங்குஞ்சாரல் அண்ணாமலையாரை
நல்லார்பரவப் படுவான்காழி ஞானசம்பந்தன்
சொல்லால்மலிந்த பாடலான பத்தும் இவைகற்று
வல்லாரெல்லாம் வானோர் வணங்க மன்னி வாழ்வாரே. 29

திருஇலம்பையங்கோட்டூர் பண்-குறிஞ்சி

மலையினார்பருப்பதந் துருத்திமாற்பேறு
மாசிலாச்சீர்மறைக் காடுநெய்த்தானம்,
நிலையினான்எனதுரை தனதுரையாக
நீறணிந்தேறுகந் தேறியநிமலன்,
கலையினார்மடப்பிணை துணையொடுந்துயிலக்
கானலம்பெடைபுல்கிக் கணமயிலாலும்,
இலையினார்பைம்பொழில் இலம்பையங்கோட்டூர்
இருக்கையாய்ப்பேணியென் எழில்கொள்வதியல்பே. 30

நீருளான்தீயுளான் அந்தரத்துள்ளான்
நினைப்பவர்மனத்துளான் நித்தமாஏத்தும்
ஊருளான் எனதுரை தனதுரையாக
ஒற்றைவெள் ளேறுகந் தேறியவொருவன்

Koviloor Digital Library

பாருளார் பாடலோ டாடல்அறாத
பண்முரன்றஞ்சிறை வண்டினம்பாடும்
ஏருளார்பைம்பொழில் இலம்பையங்கோட்டூர்
இருக்கையாப்பேணியென் எழில்கொள்வ தியல்பே. 31

கந்தனைமலிகனை கடலொலியோதங்
கானலங்கழிவளர் கழுமலமென்னும்
நந்தியாருறைபதி நான்மறைநாவன்
நற்றமிழ்க்கின்துணை ஞானசம்பந்தன்
எந்தையார்வளநகர் இலம்பையங்கோட்டூர்
இசையொடுகூடிய பத்தும்வல்லார்போய்
வெந்துயர் கெடுகிட விண்ணவரோடும்
வீடுபெற்றிம்மையின் வீடெளிதாமே. 32

திருஅச்சிறுபாக்கம் பண்-குறிஞ்சி

தேனினும்இனியர் பாலனநீற்றர்
தீங்கரும் பனையர்தந் திருவடிதொழுவார்
ஊன்நயந்துருக உவகைகள்தருவார்
உச்சிமேலுறைபவர் ஒன்றலாதுூரார்,
வானகமிறந்து வையகம்வணங்க
வயங்கொளநிற்பதோர் வடிவினையுடையார்
ஆனையின்உரிவை போர்த்தஎம்அடிகள்
அச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. 33

மைம்மலர்க்கோதை மார்பினரெனவும்
மலைமகளவளொடு மருவினரெனவும்

Koviloor Digital Library

செம்மலர்ப்பிறையுஞ் சிறையணிபுனலுஞ்
சென்னிமேலுடையரெஞ் சென்னிமேலுறைவார்
தம்மலரடியொன் றடியவர்பரவத்
தமிழ்ச்சொலும்வடசொலுந் தாள்நிழற்சேர
அம்மலர்க்கொன்றை யணிந்தஎம்அடிகள்
அச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. 34

திருக்கழுமலம் பண்-குறிஞ்சி

எண்ணிடையொன்றினர் இரண்டினர்உருவம்
எரியிடைமூன்றினர் நான்மறையாளர்
மண்ணிடைஐந்தினர் ஆறினர்அங்கம்
வகுத்தனர் ஏழிசை யெட்டிருங்கலைசேர்
பண்ணிடையொன்பதும் உணர்ந்தவர்பத்தர்
பாடிநின்றடிதொழ மதனனைவெகுண்ட
கண்ணிடைக்கனலினர் கருதியகோயில்
கழுமலம்நினையநம் வினைகரிசறுமே. 35

கோயில் பண்-குறிஞ்சி

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. 36

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே, 37

Koviloor Digital Library

ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன்
சீலத் தார்கொள்கைச் சிற்றம் பலமேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத் தாற்பாட வல்லார் நல்லாரே. 38

திருவாரூர்

திருவிருக்குக் குறள் பண்-குறிஞ்சி

சித்தந் தெளிவீர்கள், அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ, முத்தி யாகுமே. 39
பிறவி யறுப்பீர்காள், அறவன் ஆரூரை
மறவா தேத்துமின், துறவி யாகுமே. 40
துன்பந் துடைப்பீர்காள், அன்பன் அணியாரூர்
நன்பொன் மலர்தூவ, இன்ப மாகுமே. 41
உய்ய லுறுவீர்காள், ஐயன் ஆரூரைக்
கண்டு மலர்தூவ விண்டு வினைபோமே. 42
பிண்டம் அறுப்பீர்காள், அண்டன் ஆரூரைக்
கையி னால்தொழ, நையும் வினைதானே. 43
பாசம் அறுப்பீர்காள், ஈசன் அணியாரூர்
வாச மலர்தூவ, நேச மாகுமே. 44
வெய்ய வினைதீர, ஐயன் அணியாரூர்
செய்ய மலர்தூவ, வையம் உமதாமே. 45

திருவீழிமிழலை

திருவிருக்குக்குறள் பண்-குறிஞ்சி

வாசி தீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏச லில்லையே. 46

Koviloor Digital Library

இறைவ ராயினீர், மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை, முறைமை நல்குமே. 47
செய்ய மேனியீர், மெய்கொள் மிழலையீர்
பைகொள் அரவினீர், உய்ய நல்குமே. 48
நீறு பூசினீர், ஏற தேறினீர்
கூறு மிழலையீர், பேறும் அருளுமே. 49
காமன் வேவவோர், தூமக் கண்ணினீர்
நாமம் மிழலையீர், சேமம் நல்குமே. 50
பிணிகொள் சடையினீர், மணிகொள் மிடறினீர்
அணிகொள் மிழலையீர், பணிகொண் டருளுமே 51
மங்கை பங்கினீர், துங்க மிழலையீர்
கங்கை முடியினீர், சங்கை தவிர்மினே 52

திருவாலவாய்

திருவிருக்குக்குறள் பண்-குறிஞ்சி

நீல மாமிடற், றால வாயிலான்
பால தாயினார், ஞாலம் ஆள்வரே. 53
ஞாலம் ஏழுமாம், ஆல வாயிலார்
சீல மேசொலீர், காலன் வீடவே. 54
ஆல நீழலார், ஆல வாயிலார்
கால காலனார், பால தாமினே. 55
அந்த மில்புகழ், எந்தை யாலவாய்
பந்தி யார்கழல், சிந்தை செய்ம்மினே. 56

Koviloor Digital Library

ஆடலேற்றினான், கூட லாலவாய்
பாடி, யேமனம், நாடி வாழ்மினே 57
அண்ணல் ஆலவாய், நண்ணி னான் தனை
எண்ணி யே தொழத், திண்ணம் இன்பமே. 58

திருச்சிராப்பள்ளி பண் - குறிஞ்சி

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையாருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிரும்மே. 59

கைம்மகவேந்திக் கடுவனொடூடிக் கழைபாய்வான்
செம்முகமந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி
வெம்முகவேழத் தீருரிபோர்த்த விகிர்தாநீ
பைம்முகநாகம் மதியுடன்வைத்தல் பழியன்றே. 60

தேனயம்பாடுஞ் சிராப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானல்சங்கேறுங் கழுமலவூரிற் கவுணியன்
ஞானசம்பந்தன் நலம்மிகு பாடல் இவைவல்லார்
வான சம்பந்தத் தவரொ டுமன்னி வாழ்வாரே. 61

திருக்குற்றாலம் பண் - குறிஞ்சி

வம்பார்குன்றம் நீடுயர்சாரல் வளர்வேங்கைக்
கொம்பார்சோலைக் கோலவண்டியாழ்செய் குற்றாலம்
அம்பால்நெய்யோ டாடல்அமர்ந்தான் அலர்கொன்றை
நம்பான்மேய நன்னகர்போலும் நமரங்காள். 62

Koviloor Digital Library

திருக்கண்ணார்கோயில் பண்-குறிஞ்சி

தண்ணார்திங்கட் பொங்கரவந்தாழ் புனல்சூடிப்
பெண்ணாணாய பேரருளாளன் பிரியாத
கண்ணார்கோயில் கைதொழுவோர்கட் கிடர்பாவம்
நண்ணாவாகும் நல்வினையாய நணுகும்மே. 63

முன்னொருகாலத் திந்திரன்உற்ற முனிசாபம்
பின்னொருநாளவ் விண்ணவரேத்தப் பெயர்வெய்தித்
தன்னருளாற்கண் ஆயிரம்ஈந்தோன் சார்பென்பர்
கன்னியர்நாளுந் துன்னமர் கண்ணார் கோயிலே. 64

காமருகண்ணார் கோயிலுளானைக் கடல்சூழ்ந்த
பூமருசோலைப் பொன்னியல்மாடப் புகலிக்கோன்
நாமருதொன்மைத் தன்மையுள்ஞான சம்பந்தன்
பாமருபாடல் பத்தும்வல்லார்மேற் பழிபோமே. 65

பொது

திருநீலகண்டம் பண்-வியாழக்குறிஞ்சி

அவ்வினைக் கிவ்வினை யாமென்று
சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும்
உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல்
போற்றுதும் நாம டியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ
றாதிரு நீலகண்டம். 66

Koviloor Digital Library

மறக்கும் மனத்தினை மாற்றியெம்
ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக்
கீழ்ப்பிழை யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை
யேத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ
றாதிரு நீலகண்டம். 67

பிறந்த பிறவியிற் பேணியெஞ்
செல்வன் கழலடைவான்
இறந்த பிறவியுண் டாகில்
இமையவர் கோன் அடிக்கண்
திறம்பயில் ஞானசம் பந்தன
செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர்
கோனொடுங் கூடுவரே. 68

திருக்கழுமலம்

திருத்தாளச்சதி — பண்-வியாழக்குறிஞ்சி

பந்தத்தால் வந்தெப்பால்
பயின்றுநின்ற வும்பரப்
பாலேசேர்வா யேனோர்கான்
பயில்கண முனிவர்களுஞ்
சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின்
மங்கை தன்னொடுஞ்

Koviloor Digital Library

சேர்வார்நாள்நாள் நீள்கயிலைத்
திகழ்தரு பரிசதெலாஞ்
சந்தித்தே யிந்தப்பார் சனங்கள்
நின்று தங்கணால்
தாமேகாணா வாழ்வாரத்
தகவுசெய் தவனதிடங்
கந்தத்தால் எண்டிக்குங் கமழ்ந்
திலங்கு சந்தனக்
காடார்பூவார் சீர்மேவுங்
கழுமல வளநகரே. 69

திருவையாறு பண்-மேகராகக்குறிஞ்சி

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம்மேலுந்தி
அமலந்த போதாக அஞ்சேலென்
றருள்செய்வான் அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே. 70

திருவீழிமிழலை பண்-மேகராகக் குறிஞ்சி

ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங் கீரிருவர்க்
கிரங்கி நின்று
நேரியநான் மறைப்பொருளை யுரைத்தொளிசேர்
நெறியளித்தோன் நின்றகோயில்

Koviloor Digital Library

பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோதும்
ஓசைகேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருட்
சொல்லும் மிழலையாமே. 71

உரைசேரும் எண்பத்து நான்குநூ றாயிரமாம்
யோனிபேதம்
நிரைசேரப் படைத்தவற்றின் உயிருக்குயிராய்
அங்கங்கே நின்றான் கோயில்
வரைசேரும் முகில்முழவ மயில்கள் பல நடமாட
வண்டுபாட
விரைசேர்பொன் இதழிதர மென்காந்தள்
கையேற்கும் மிழலையாமே. 72

திருத்தருமபுரம் பண் - யாழ்மூரி

மாதர்ம டப்பிடியும் மட அன்னமும் அன்னதோர்
நடை யுடைம் மலை மகள் துணையென மகிழ்வர்
பூதஇ னப்படைநின் றிசை பாடவும் ஆடுவர்
அவர் படர் சடைந் நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்திரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னைதயங் கும லர்ச்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயில் தருமபு ரம்பதியே 73

Koviloor Digital Library

இரண்டாந் திருமுறை

திருமருகல் பண்-இந்தளம்

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே. 74

வழுவாள் பெருமான் கழல்வாழ் கவெனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவா ளுடையாய் மருகற் பெருமான்
தொழுவா ளிவளைத் துயராக் கினையே. 75

வயஞா னம் வல்லார் மருகற் பெருமான்
உயர்ஞா னமுணர்ந் தடியுள் குதலால்
இயன்ஞா னசம்பந் தனபா டல்வல்லார்
வியன்ஞா லமெல்லாம் விளங்கும் புகழே. 76

திருமறைக்காடு பண்-இந்தளம்

சதுரம் மறைதான் துதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க எனக்குன்
கதவந் திருக்காப் புக்கொள்ளுங் கருத்தாலே. 77

காழிந் நகரான் கலைஞா னசம்பந்தன்
வாழிம் மறைக்கா டனைவாய்ந் தறிவித்த
ஏழின் இசைமா லையீரைந் திவைவல்லார்
வாழி யுலகோர் தொழவான் அடைவாரே. 78

Koviloor Digital Library

திருச்சாய்க்காடு பண்-இந்தளம்

நித்தலுந் நியமஞ் செய்துநீர் மலர்தூவிச்
சித்தமொன் றவல்லார்க் கருளுஞ் சிவன்கோயில்
மத்தயா னையின்கோ டும்வண்பீ லியும்வாரித்
தத்துநீர்ப் பொன்னி சாகரம்மேவு சாய்க்காடே. 79

ஏனையோர் புகழ்ந்தேத் தியஎந்தை சாய்க்காட்டை
ஞானசம் பந்தன்கா ழியர்கோன் நவில்பத்தும்
ஊனமின் றியுரை செயவல்லவர் தாம்போய்
வானநா டினிதாள் வரிம்மா நிலத்தோரே. 80

பண்-சீகாமரம்

மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலுங்
கண்புகார் பிணியறியார் கற்றாருங் கேட்டாரும்
விண்புகா ரெனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டெந் தலைவன்தாள் சார்ந்தாரே. 81

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே. 82

நொம்பைந்து புடைத்தொல்கு நூபுரஞ்சேர் மெல்லடியார்
அம்பந்தும் வரிக்கழலும் அரவஞ்செய் பூங்காழிச்
சம்பந்தன் தமிழ்பகர்ந்த சாய்காட்டுப் பத்தினையும்
எம்பந்த மெனக்கருதி ஏத்துவார்க் கிடர்கெடுமே. 83

Koviloor Digital Library

திருப்புள்ளிருக்கு வேளூர் பண் - சீகாமரம்

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடிஎம் பெருமானார் உறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே 84

கீதத்தை மிகப்பாடும் அடியார் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே. 85

செடியாய வுடல்தீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்
பொடியாடிக் கடிமைசெய்த புள்ளிருக்கு வேளூரைக்
கடியார்ந்த பொழிற்காழிக் கவுணியன்சம் பந்தன் சொல்
மடியாது சொல்லவல்லார்க் கில்லையாம் மறுபிறப்பே 86

திருமயிலாப்பூர் பண் - சீகாமரம்

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய். 87

மைப்பயந்த ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவுங் காணாதே போதியோ பூம்பாவாய். 88

Koviloor Digital Library

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான்தொல் கார்த்திகைநாள்
தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய். 89

ஊர்திரை வேலை யுலாவும் உயர்மயிலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய். 90

மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரம்அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய். 91

மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
அடல்ஆனே றூரும் அடிக ளடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய். 92

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய். 93

கானமர் சோலைக் கபாலீச் சரம் அமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்தன் நலம்புகழ்ந்த பத்தும்வலார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே. 94

Koviloor Digital Library

திருவெண்காடு பண் - சீகாமரம்

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங்
கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டுஞ்
சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும்
புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டுங்
கொடியானே. 95

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ
டுள்ள நினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்
டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு
முக்குளநீர்
தோய்வினையா ரவர் தம்மைத் தோயாவாந்
தீவினையே. 96

திருவாலவாய் பண் - காந்தாரம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே. 97

Koviloor Digital Library

முக்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே. 98

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 99

திருநணா (பவாநி) பண்-காந்தாரம்

பந்தார் விரல்மடவாள் பாகமா
நாகம்பூண் டேறதேறி
அந்தார் அரவணிந்த அம்மா
னிடம்போலும் அந்தண்சாரல்
வந்தார் மடமந்தி கூத்தாட
வார்பொழிலில் வண்டுபாடச்
செந்தேன் தெளியொளிரத் தேமாக்
கனியுதிர்க்குந் திருநணாவே. 100

கல்வித் தகத்தால் திரைசூழ் கடற்காழிக்
கவுணிசீரார்
நல்வித் தகத்தால் இனிதுணரும் ஞானசம்
பந்தன் எண்ணும்
சொல்வித் தகத்தால் இறைவன் திருநணா
ஏத்துபாடல்
வல்வித் தகத்தான் மொழிவார் பழியிலரிம்
மண்ணின்மேலே. 101

Koviloor Digital Library

கோளறு திருப்பதிகம் பண்-பியந்தைக்காந்தாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 102

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடொன் றொடேழுபதினெட்டொடாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 103

உருவளர் பவளமேனி யொளிநீ றணிந்து
வுமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமேலணிந்த
னுளமே புகுந்தவதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே. 104

Koviloor Digital Library

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோதுமெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுண நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 105

நஞ்சணி கண்டனெந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின வவுணரோடு முரு மிடியு மின்னு
மிகையானபூத மவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 106

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடிவந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 107

Koviloor Digital Library

செப்பிள முலைநன்மங்கை யொருபாக மாக
விடையேறுசெல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பு முடிமேல ணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையானவந்து நலியா
அப்படி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 108

வேள்பட விழிசெய்தன்று விடைமேலிருந்து
மடவாள் தனோடுமுடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை யரையன்ற னோடு
மிடரான வந்து நலியா
ஆழ்கட னல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 109

பலபல வேடமாகும் பரனாரிபாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடன் மேருநல்ல அவைநல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 110

Koviloor Digital Library

கொத்தலர் குழலியோடு விசயற்குநல்கு
குணமாயவேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமேல ணிந்தென்
உள்ளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணைவாதி லழிவிக்கும் மண்ணல்
திருநீறுசெம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 111

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. 112

திருநெல்வாயிலாத்துறை பண்-பியந்தைக்காந்தாரம்

எந்தை யீசனெம் பெருமான் ஏறமர்
கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை
கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புனல்
நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில் அரத்துறை
யடிகள்தம் அருளே. 113

Koviloor Digital Library

நீல மாமணி மிடற்று நீறணி
சிவனெனப் பேணும்
சீல மாந்தர்கட் கல்லாற் சென்றுகை
கூடுவ தன்றால்
கோல மாமல ருந்திக் குளிர்புனல்
நிவாமல்கு கரைமேல்
ஆலுஞ் சோலை நெல்வாயில் அரத்துறை
யடிகள்தம் அருளே. 114

கறையி னார்பொழில் சூழ்ந்த காழியுள்
ஞானசம் பந்தன்
அறையும் பூம்புனல் பரந்த அரத்துறை
யடிகள்தம் அருளை
முறைமை யாற்சொன்ன பாடல் மொழியும்
மாந்தர்தம் வினைபோய்ப்
பறையும் ஐயுற வில்லைப் பாட்டிவை
பத்தும் வல்லார்க்கே. 115

திருவாழ்கொளிபுத்தூர் பண்-பியந்தைக்காந்தாரம்

சாகை யாயிர முடையார் சாமமும்
ஓதுவ துடையார்
ஈகை யார்கடை நோக்கி யிரப்பதும்
பலபல வுடையார்
தோகை மாமயி லனைய துடியிடை
பாகமும் உடையார்
வாகை நுண்துளி வீசும் வாழ்கொளி
புத்தூ ருளாரே. 116

Koviloor Digital Library

பரவு வாரையும் உடையார் பழித்திகழ்
வாரையும் உடையார்
விரவு வாரையும் உடையார் வெண்டலைப்
பலிகொள்வ துடையார்
அரவம் பூண்பதும் உடையார் ஆயிரம்
பேர்மிக வுடையார்
வரமும் ஆயிரம் உடையார் வாழ்கொளி
புத்தூ ருளாரே. 117

நலங்கொள் பூம்பொழில் காழி நற்றமிழ்
ஞானசம் பந்தன்
வலங்கொள் வெண்மழு வாளன் வாழ்கொளி
புத்தூ ருளானை
இலங்கு வெண்பிறை யானை யேத்திய
தமிழிவை வல்லார்
நலங்கொள் சிந்தைய ராகி நன்னெறி
யெய்துவர் தாமே. 118

திருவலஞ்சுழி பண்-நட்டராகம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே. 119

Koviloor Digital Library

மாதோர் கூறனை வலஞ்சுழி மருவிய
மருந்தினை வயற்காழி
நாதன் வேதியன் ஞானசம் பந்தன்வாய்
நவிற்றிய தமிழ்மாலை
ஆதரித்திசை கற்றுவல் லார்சொல்க்
கேட்டுகந் தவர்தம்மை
வாதி யாவினை மறுமைக்கும் இம்மைக்கும்
வருத்தம்வந் தடையாவே. 120

திருக்கேதாரம் பண்-செவ்வழி

தொண்டரஞ்சு களிறும் மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனை நீல மொட்டலருங் கேதாரமே.

வாய்ந்த செந்நெல் விளைகழனி மல்கும்வயற் காழியான்
ஏய்ந்தநீர்க்கோட் டிமையோ ருறைகின்ற கேதாரத்தை
ஆய்ந்துசொன்ன அருந்தமிழ்கள் பத்தும்மிசை வல்லவர்
வேந்தராகி யுலகாண்டு வீடுகதி பெறுவரே. 121

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

மூன்றாந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

திருவாவடுதுறை நாலடிமேல்வைப்பு

பண்-காந்தார பஞ்சமம்

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை யரனே 123

வாழினுஞ் சாவினும் வருந்தினும்போய்
வீழினு முனகழல் லிடுவேனல்லேன்
தாழிளம் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோ எமையாளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின் னருள்ஆவடுதுறை யரனே. 124

நனவினுங் கனவினு நம்பாவுன்னை
மனவினும் வழிபடன் மறவேனம்மான்
புனல்விரி நறுங் கொன்றைப் போதணிந்த
கனலெரி யனல்புல்கு கையவனே
இதுவோ எமையாளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின் னருள்ஆவடுதுறையரனே. 125

Koviloor Digital Library

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மல ரடியலா லரற்றாதென்னாக்
கைமல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதி லெரியெழ முனிந்தவனே

இதுவோ எமையாளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின் னருள்ஆவடுதுறை யரனே. 126

கையது வீழினுங் கழிவுறினும்
செய்கழ லடியலாற் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே

இதுவோ எமையாளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறையரனே. 127

வெந்துயர்தோன்றியோர் வெருவுறினும்
எந்த யுன்னடியலா லேத்தாதென்னா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே

இதுவோ எமையாளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின் னருள்ஆவடுதுறையரனே. 128

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் னடியலா லரற்றாதென்னா
ஒப்புடை யொருவனை யுருவழிய
அப்படி யழலெழ விழித்தவனே

இதுவோ எமையாளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின் னருள்ஆவடுதுறையரனே. 129

Koviloor Digital Library

பேரிடர் பெருகியோர் பிணிவரினும்
சீருடைக் கழலலாற்சிந்தை செய்யேன்
ஏருடை மணிமுடி யிராவணனை
ஆரிடர் படவரை யடர்த்தவனே

இதுவோ எமையாளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின் னருள்ஆவடுதுறையரனே. 130

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும்நின்
ஒண்மல ரடியலால் உரையாதென்னாக்
கண்ணனுங் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே

இதுவோ எமையாளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின் னருள்ஆவடுதுறையரனே. 130

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் னடியலா லரற்றாதென்னப்
புத்தருஞ் சமணரும் புறனுரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே

இதுவோ எமையாளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின் னருள்ஆவடுதுறையரனே. 132

அலைபுனல் ஆவடு துறையமர்ந்த
இலைநுனை வேற்படை யெம்இறையை
நலம்மிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை யருந்தமிழ் மாலைவல்லார்

வினையாயினநீங் கிப்போய்விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் னேறுவர்நிலமிசை நிலையிலரே. 133

Koviloor Digital Library

பஞ்சாக்கரத் திருப்பதிகம் பண்-காந்தாரபஞ்சமம்

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே. 134

மந்திரம் நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே. 135

ஊனி லுயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழித்திறந் தேத்து வார்க்கிடர்
ஆன கெடுப்பன அஞ்செ ழுத்துமே. 136

நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல்கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்தமர் கொண்டு போமிடத்
தல்லல்கெ டுப்பன அஞ்செ ழுத்துமே. 137

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கர வின்படம் அஞ்சுந் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செ ழுத்துமே. 138

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்

Koviloor Digital Library

இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை அஞ்செ ழுத்துமே. 139

வீடுபி றப்பை யறுத்து மெச்சினர்
பீடைகெ டுப்பன பின்னை நாடொறும்
மாடுகொ டுப்பன மன்னு மாநடம்
ஆடியு கப்பன அஞ்செ ழுத்துமே. 140

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டையி ராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்டம் அளிப்பன அஞ்செ ழுத்துமே. 141

கார்வணன் நான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன அஞ்செ ழுத்துமே. 142

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்னைப்பகைக்
கத்திர மாவன அஞ்செ ழுத்துமே. 143

நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்
துற்றன வல்லவர் உம்ப ராவரே. 144

Koviloor Digital Library

திருக்கழுமலம் பண்-கொல்லி

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே. 145

பேதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே. 146

கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொள்கையோ டிருந்தஎம் பிரான்றனை
அருந்தமிழ் ஞானசம் பந்தன செந்தமிழ்
விரும்புவா ரவர்கள்போய் விண்டுல காள்வரே. 147

திருவுசாத்தானம் பண்-கொல்லி

நீரிடைத் துயின்றவன் தம்பிநீள் சாம்புவான்
போருடைச் சுக்கிரீ வன்அநு மான்தொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தஎம்
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத் தானமே. 148

வரைதிரிந் திழியுநீர் வளவயற் புகலிமன்
திரைதிரிந் தெறிகடல் திருவுசாத் தானரை
உரைதெரிந் துணருஞ்சம் பந்தனொண் தமிழ்வல்லார்
நரைதிரை யின்றியே நன்னெறி சேர்வரே. 149

Koviloor Digital Library

திருக்காளத்தி

பண் - கொல்லி

சந்தமார் அகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணையடி யென்மனத் துள்ளவே. 150

கோங்கமே குரவமே கொன்றையம் பாதிரி
மூங்கில்வந் தணைதரு முகலியின் கரையினில்
ஆங்கமர் காளத்தி யடிகளை அடிதொழ
வீங்குவெந் துயர்கெடும் வீடெளி தாகுமே. 151

அட்டமா சித்திகள் அணைதரு காளத்தி
வட்டவார் சடையனை வயலணி காழியான்
சிட்டநான் மறைவல ஞானசம் பந்தன்சொல்
இட்டமாப் பாடுவார்க் கில்லையாம் பாவமே. 152

திருவாலவாய்

பண் - கொல்லி

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந்
தேவிகேள்
பானல்வாயொரு பாலன்ஈங்கிவன் என்றுநீபரி
வெய்திடேல்
ஆனை மாமலை யாதியாய இடங்களிற்பல
அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு ஆலவாயரன்
நிற்கவே. 153

Koviloor Digital Library

எக்கராம்அமண் கையருக்கெளி யேனலேன்திரு
ஆலவாய்ச்
சொக்கனென்னு ளிருக்கவேதுளங் கும்முடித்
தென்னன் முன்னிலை
தக்கசீர்ப்புக லிக்குமன் தமிழ் நாதன் ஞானசம்
பந்தன்வாய்
ஒக்கவேயுரை செய்தபத்தும் உரைப்பவர்க்கிடர்
இல்லையே. 154

நமச்சிவாயத் திருப்பதிகம் பண்-கௌசிகம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே. 155

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தான்நினை வார்க்கினி யான்நெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே. 156

நந்தி நாமம் நமச்சிவா யவெனும்
சந்தை யால்தமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே. 157

Koviloor Digital Library

திருவாலவாய்

திருவிராகம் பண் - கௌசிகம்

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாங் குலாயதென்ன கொள்கையே. 158

குற்றம்நீ குணங்கள்நீ கூடல்ஆல வாயிலாய்
சுற்றம்நீ பிரானுநீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்தும்நீ அருந்தமின்ப மென்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் உரைப்பதென்முக ம்மனே. 159

கோலமாய நீள்மதிற் கூடல்ஆல வாயிலாய்
பாலனாய தொண்டுசெய் பண்டுமின்றும் உன்னையே
நீலமாய கண்டனே நின்னையன்றி நித்தலும்
சீலமாய சிந்தையில் தேர்வதில்லை தேவரே. 160

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பலீ
கொன்றையம் முடியினாய் கூடல்ஆல வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. 161

ஆதியந்த மாயினாய் ஆலவாயில் அண்ணலே
சோதியந்த மாயினாய் சோதியுள்ளொர் சோதியாய்
கீதம்வந்த வாய்மையால் கிளர்தருக்கி னார்க்கலால்
ஓதிவந்த வாய்மையால் உணர்ந்துரைக்க லாகுமே. 162

Koviloor Digital Library

போயநீர் வளங்கொளும் பொருபுனற் புகலியான்
பாயகேள்வி ஞானசம் பந்தன்நல்ல பண்பினால்
ஆயசொல்லின் மாலைகொண் டாலவாயில் அண்ணலைத்
தீயதீர எண்ணுவார்கள் சிந்தையாவர் தேவரே. 163

திருவானைக்கா திருவிராகம், பண்-கௌசிகம்

வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக்காவில் இன்மொழித் தேவிபாக மாயினான்
ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க் கேதும்ஏதம் இல்லையே. 164

ஊழியூழி வையகத் துயிர்கள் தோற்றும் வானொடும்
ஆழியானுங் காண்கிலா ஆனைக்காவில் அண்ணலைக்
காழிஞான சம்பந்தன் கருதிச்சொன்ன பத்திவை
வாழியாகக் கற்பவர் வல்வினைகள் மாயுமே. 165

திருப்பாசுரம் பண்-கௌசிகம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே. 166

ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி
மாதுக்கம் நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே. 167

Koviloor Digital Library

நல்லார்கள் சேர்புகலி ஞானசம் பந்தன் நல்ல
எல்லார் களும்பரவும் ஈசனை யேத்து பாடல்
பல்லார் களும்மதிக்கப் பாசுரம் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோ ருலகாளவும் வல்ல ரன்றே. 168

திருச்செங்காட்டங்குடி — பண்-பஞ்சமம்

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே. 169

செந்தண்பூம் புனல்பரந்த செங்காட்டங் குடிமேய
வெந்தநீ றணிமார்பன் சிறுத்தொண்ட னவன்வேண்ட
அந்தண்பூங் கலிக்காழி அடிகளையே அடிபரவும்
சந்தங்கொள் சம்பந்தன் தமிழுரைப்போர் தக்கோரே. 170

திருநெல்வேலி — பண்-சாதாரி

மருந்தவை மந்திரம் மறுமைநன் னெறியவை
மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தைசெய்
நன்னெஞ்சமே
பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன்
சொரிதரத் துன்றுபைம்பூம்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வே
லியுறை செல்வர் தாமே. 171

Koviloor Digital Library

பெருந்தண்மா மலர்மிசை அயனவன்
அனையவர் பேணுகல்வித்
திருந்துமா மறையவர் திருநெல்வே லியுறை
செல்வர் தம்மைப்
பொருந்துநீர்த் தடம்மல்கு புகலியுள் ஞானசம்
பந்தன் சொன்ன
அருந்தமிழ் மாலைகள் பாடியா
டக்கெடும் அருவினையே. 172

திருவாலவாய் நாலடிமேல்வைப்பு, பண்-பழம்பஞ்சுரம்

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுடனாய பரமனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. 173

கூடல் ஆலவாய்க் கோனை விடைகொண்டு
வாடல் மேனி அமணரை வாட்டிட
மாடக் காழிச்சம் பந்தன் மதித்தஇப்
பாடல் வல்லவர் பாக்கிய வாளரே. 174

திருக்கழுமலம்

திருவியமகம் பண்-பழம்பஞ்சுரம்

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே

Koviloor Digital Library

கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே
அமர்கள் செய்வதும் உன்பணியே
பெற்றம் உகந்தது கந்தனையே
பிரம புரத்தை உகந்தனையே. 175

கண்ணிகழ் புண்டரி கத்தினனே
கலந்திரி புண்டரி கத்தினனே
மண்ணிக ழும்பரி சேனமதே
வானக மேய்வகை சேனமதே
நண்ணி யடிமுடி யெய்தலரே
நளிர்மலி சோலையில் எய்தலரே
பண்ணியல் கொச்சை பசுபதியே
பசுமிக ஊர்வர் பசுபதியே. 176

பண்-புறநீர்மை

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவதும் இதுவே. 177

Koviloor Digital Library

பன்னலம் புணரும் பாண்டிமா தேவி
குலச்சிறை யெனுமிவர் பணியும்
அந்நலம் பெறுசீர் ஆலவா யீசன்
திருவடி யாங்கவை போற்றிக்
கன்னலம் பெரிய காழியுள் ஞான
சம்பந்தன் செந்தமி ழிவைகொண்
டின்னலம் பாட வல்லவர் இமையோர்
ஏத்தவீற் றிருப்பவர் இனிதே. 178

திருநல்லூர்ப்பெருமணம் பண்-அந்தாளிக்குறிஞ்சி

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேயநம் பானே. 179

நறும்பொழிற் காழியுள் ஞானசம் பந்தன்
பெறும்பத நல்லூர்ப் பெருமணத் தானை
உறும்பொரு ளாற்சொன்ன வொண்டமிழ் வல்லார்க்
கறும்பழி பாவம் அவலம் இலரே. 180

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

திருநாவுக்கரசு நாயனார்
நான்காம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

திருஅதிகைவீரட்டானம் பண் - கொல்லி

கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல
செய்தன நானறியேன்
ஏற்றா யடிக் கேஇர வும்பகலும் பிரியாது
வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு
துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன்அதி கைக்கெடில வீரட்டா
னத்துறை அம்மானே. 181

நெஞ்சம்உமக் கேயிட மாகவைத்தேன் நினையா
தொருபோதும் இருந்தறியேன்
வஞ்சம்இது வொப்பது கண்டறியேன் வயிற்றோடு
துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை நணுகாமல்
துரந்து கரந்துமிடீர்
அஞ்சேலு மென்னீர் அதி கைக்கெடில வீரட்டா
னத்துறை அம்மானே. 182

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசை
பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன் உன்னாமம்
என்னாவில் மறந்தறியேன்.

Koviloor Digital Library

உலந்தார் தலையிற்பலி கொண்டுழல்வாய் உடலுள்ளுறு
 சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா
 னத்துறை அம்மானே. 183

போர்த்தாயங்கொ ரானையின் ஈருரிதோல்புறங்கா
 டரங்காநட மாடவல்லாய்
ஆர்த்தானரக் கன்றனை மால்வரைக்கீழ் அடர்த்திட்
 டருள் செய்த வதுகருதாய்
வேர்த்தும் புரண்டும்விழுந்தும் எழுந்தால் என்வேதனை
 யான விலக்கியிடாய்
ஆர்த்தார்புனல் சூழ்அதி கைக்கெடில வீரட்டா
 னத்துறை அம்மானே. 184

திருவையாறு பண் - காந்தாரம்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையாள் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 185

வளர்மதிக் கண்ணியி னானை வார்குழ லாளொடும் பாடிக்
களவு படாததொர் காலங் காண்பான் கடைக்கணிக் கின்றேன்

Koviloor Digital Library

அளவு படாததொ ரன்போ டையா றடைகின்ற போது
இளமண நாகு தழுவி ஏறு வருவன கண்டேன்.
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். 186

திருக்கச்சியேகம்பம் பண்-காந்தாரம்

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனலேந்தி
இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே. 187

தேனோக்குங் கிளிமழலை உமைகேள்வன் செழும்பவளம்
தானோக்கும் திருமேனி தழலுருவாஞ் சங்கரனை
வானோக்கும் வளர்மதிசேர் சடையானை வானோர்க்கும்
ஏனோர்க்கும் பெருமானை என்மனத்தே வைத்தேனே. 188

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே 189

அடுத்தானை உரித்தானை அருச்சுனர்க்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சுனைமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை என்மனத்தே வைத்தேனே.

திருஅங்கமாலை பண்-சாதாரி

தலையே நீவணங்காய்-தலை மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத் தலையேநீவணங்காய்

Koviloor Digital Library

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டடன்றன்னை
எண்டோள் வீசிநின் றாடும் பிரான் றன்னைக்
கண்காள் காண்மின்களோ. 191

செவிகாள் கேண்மின்களோ - சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்திறம் எப்போதுஞ்
செவிகாள் கேண்மின்களோ. 192

மூக்கே நீமுரலாய் - முது காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கைம ணாளனை
மூக்கே நீமுரலாய். 193

வாயே வாழ்த்துகண்டாய் - மத யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்தன்னை
வாயே வாத்துகண்டாய். 194

நெஞ்சே நீ நினையாய் - நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கைம ணாளனை
நெஞ்சமே நீநினையாய். 195

கைகாள் கூப்பித்தொழீர் - கடி மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர். 196

ஆக்கை யாற்பயனென் - அரன்கோயில் வலம்வந்து
பூக்கையால் அட்டிப் போற்றியென் னாத இவ்
ஆக்கை யாற்பயனென். 197

Koviloor Digital Library

கால்க ளாற்பயனென் - கறைக் கண்டனுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்க ளாற்பயனென். 198

உற்றா ராருளரோ - உயிர் கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லால்நமக்
குற்றார் ஆருளரோ 199

இறுமாந் திருப்பன்கொலோ - ஈசன் பல்கணத்
தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக்கீழ்ச் சென்றங்
கிறுமாந் திருப்பன்கொலோ. 200

தேடிக் கண்டுகொண்டேன் - திரு மாலொடு
நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுளே
தேடிக் கண்டுகொண்டேன். 201

நமச்சிவாயத் திருப்பதிகம் பண்-காந்தாரபஞ்சமம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 202

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன் அஞ்சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே. 203

Koviloor Digital Library

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே. 204

மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்(து)
ஏத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே. 205

திருப்பழனம் பண்-பழந்தக்கராகம்

மண்பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானைப்
பண்பொருந்த இசைபாடும் பழனஞ்சேர் அப்பனைஎன்
கண்பொருந்தும் போதத்துங் கைவிடநான் கடவேனோ. 206

பொது

விடந்தீர்த்த திருப்பதிகம் பண்-இந்தளம்

ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவர் ஊர்வது தானே. 207

இரண்டுகொ லாமிமை யோர்தொழு பாதம்
இரண்டுகொ லாமிலங் குங்குழை பெண்ணாண்
இரண்டுகொ லாமுரு வஞ்சிறு மான்மழு
இரண்டுகொ லாமவர் எய்தின தாமே. 208

Koviloor Digital Library

மூன்றுகொ லாமவர் கண்ணுத லாவன
மூன்றுகொ லாமவர் சூலத்தின் மொய்யிலை
மூன்றுகொ லாங்கணை கையது வில்நாண்
மூன்றுகொ லாம்புர மெய்தன தாமே. 209

நாலுகொ லாமவர் தம்முக மாவன
நாலுகொ லாஞ்சன னம்முதற் றோற்றமும்
நாலுகொ லாமவர் ஊர்தியின் பாதங்கள்
நாலுகொ லாமறை பாடின தாமே. 210

அஞ்சுகொ லாமவர் ஆடர வின்படம்
அஞ்சுகொ லாமவர் வெல்புல னாவன
அஞ்சுகொ லாமவர் காயப்பட் டான்கணை
அஞ்கொ லாமவர் ஆடின தாமே. 211

ஆறுகொ லாமவர் அங்கம் படைத்தன
ஆறுகொ லாமவர் தம்மக னார்முகம்
ஆறுகொ லாமவர் தார்மிசை வண்டின்கால்
ஆறுகொ லாஞ்சுவை யாக்கின தாமே. 212

ஏழுகொ லாமவர் ஊழி படைத்தன.
ஏழுகொ லாமவர் கண்ட இருங்கடல்
ஏழுகொ லாமவர் ஆளு முலகங்கள்
ஏழுகொ லாம்இசை யாக்கின தாமே. 213

எட்டுக்கொ லாமவர் ஈறில் பெருங்குணம்
எட்டுக்கொ லாமவர் சூடு மினமலர்
எட்டுக்கொ லாமவர் தோளினை யாவன
எட்டுக்கொ லாந்திசை யாக்கின தாமே. 214

Koviloor Digital Library

ஒன்பது போலவர் வாசல் வகுத்தன
ஒன்பது போலவர் மார்பினில் நூலிழை
ஒன்பது போலவர் கோலக் குழற்சடை
ஒன்பது போலவர் பாரிடந் தானே. 215

பத்துக்கொ லாமவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக்கொ லாமெயி றுந்தெரிந் துக்கன
பத்துக்கொ லாமவர் காயப்பட் டான்தலை
பத்துக்கொ லாமடி யார் செய்கை தானே. 216

திருவொற்றியூர் — திருநேரிசை

மனமெனுந் தோணி பற்றி மதியெனுங்
கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை ஏற்றிச் செறிகட
லோடும்போது
✽மதமெனும் பாறை தாக்கி மறியும்போ
தறியவொண்ணா(து)
உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூ
ருடைய கோவே. 217

திருப்பெருவேளூர் — திருநேரிசை

விரிவிலா அறிவி னார்கள் வேறொரு
சமயஞ் செய்து
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்
கேற்ற தாகும்.

✽ மதனெனும் - வேறு பாடம்

Koviloor Digital Library

பரிவினாற் பெரியோ ரேத்தும் பெருவேளூர்
பற்றி னானை
மருவிநான் வாழ்த்தி உய்யும் வகையது
நினைக்கின் றேனே. 218

திருவீழிமிழலை — திருநேரிசை

நீற்றினை நிறையப் பூசி நித்தல்ஆ
யிரம்பூக் கொண்டு
ஏற்றுழி யொருநா ளொன்று குறையக்கண்
நிறையவிட்ட
ஆற்றலுக் காழிநல்கி யவன்கொணர்ந்
திழிச்சுங் கோயில்
வீற்றிருந் தளிப்பர்வீழி மிழலையுள்
விகிர்தனாரே. 219

திருக்கொண்டீச்சரம் — திருநேரிசை

பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க்
கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவோடு
மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளுங் குறிக்கோளி
லாது கெட்டேன்
சேலுலாம் பழன வேலித் திருக்கொண்டீச்
சரத்து ளானே. 220

Koviloor Digital Library

தனித்திருநேரிசை

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும்
    வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கி பொறையெனும்
    நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும்
    வேலி இட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற் சிவகதி
    விளையு மன்றே. 221

காயமே கோயில் ஆகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மை ஆக மனமணி இலிங்கம் ஆக
நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டி னோமே. 222

விளக்கினார் பெற்ற இன்பம் மெழுகினாற்
    பதிற்றி யாகும்
துளக்கில்நன் மலர்தொ டுத்தால் தூயவிண்
    ணேற லாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி
    ஞான மாகும்
அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகள்தாம்
    அருளு மாறே. 223

கோயில் திருவிருத்தம் பண்-கொல்லி

ஒன்றி யிருந்து நினைமின்கள் உந்தமக்
    கூனமில்லைக்

Koviloor Digital Library

கன்றிய காலனைக் காலாற் கடிந்தான்
அடியவற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம்
பலத்துநட்டம்
என்றுவந் தாய் என்னும் எம்பெரு மான்றன்
திருக்குறிப்பே. 224

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டு வதேஇந்த
மாநிலத்தே 225

வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசு பதமருள் செய்தவன் பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரந் தீவளைத் தான்தில்லை யம்பலத்துக்
கூத்தனுக் காட்பட் டிருப்பதன் றோநந்தங் கூழைமையே

முடிகொண்ட மத்தமும் முக்கண்ணின்
நோக்கும் முறுவலிப்பும்
துடிகொண்ட கையுந் துதைந்தவெண்
ணீறுஞ் சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித்
தோலும்என் பாவிநெஞ்சில்

Koviloor Digital Library

குடிகொண்ட வாதில்லை யம்பலக்
கூத்தன் குரைகழலே. 227

படைக்கல மாகஉன் நாமத் தெழுத்தஞ்சென்
நாவிற் கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் எழுபிறப் பும்உனக்
காட்செய் கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது
வணங்கித் தூநீறணிந்துன்
அடைக்கலங் கண்டாய் அணிதில்லைச்
சிற்றம் பலத்தரனே. 228

திருவொற்றியூர் திருவிருத்தம்

இன்றரைக் கண்ணுடை யாரெங்கு மில்லை
இமயமென்னும்
குன்றரைக் கண்ணன் குலமகட் பாவைக்குக்
கூறிட்டநாள்
அன்றரைக் கண்ணுங் கொடுத்துமை யாளையும்
பாகம்வைத்த
ஒன்றரைக் கண்ணன் கண்டீ ரொற்றி யூருறை
யுத்தமனே. 229

திருப்பாதிரிப்புலியூர் திருநேரிசை

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன்
தோன்றினராய்

Koviloor Digital Library

மூன்றா யுலகம் படைத்துகந் தான்மனத்
துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க் கன்பன் திருப்பா
திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன் தன்னடி
யோங்களுக்கே. 230

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங்
கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன்
உனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய நமவென்று
நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி
யூர் அரனே. 231

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி
யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டும் இவ்
வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா
திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த
தீவண்ணனே. 232

Koviloor Digital Library

திருக்கச்சியேகம்பம் **திருவிருத்தம்**

ஓதுவித் தாய்முன் அறவுரை காட்டி அமணரொடே
காதுவித் தாய்கட்ட நோய்பிணி தீர்த்தாய் கலந்தருளிப்
போதுவித் தாய்நின் பணிபிழைக் கிற்புளி யம்வளாரால்
மோதுவிப் பாய்உகப் பாய்முனி வாய்கச்சி யேகம்பனே. 233

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே
காண்பதற்கு
உருகிற்றென் உள்ளமும் நானுங் கிடந்தலந்
தெய்த்தொ ழிந்தேன்
திருவொற்றி யூரா திருவால வாயா
திருவா ரூரா
ஒருபற்றி லாமையுங் கண்டிரங் காய்கச்சி
யேகம்பனே 234

தனி திருவிருத்தம்

பெருங்கடல் மூடிப் பிரளயங் கொண்டு
பிரமனும்போய்
இருங்கடல் மூடி இறக்கும் இறந்தான்
களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபரமுங் கொண்டு
கங்காளராய்
வருங்கடல் மீளநின் றெம்மிறை நல்வீணை
வாசிக்குமே. 235

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென்
மால்வரையும்

Koviloor Digital Library

தானந் துளங்கித் தலைதடு மாறிலென்
தண்டக்லும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென்
வேலைநஞ்சுண்டு
ஊனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட
உத்தமர்க்கே. 236

சிவனெனும் நாமந் தனக்கே யுடையசெம்
மேனிஎம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடு மாகி
லவன் தனையான்
பவனெனும் நாமம் பிடித்துத் திரிந்துபன்
னாளழைத்தால்
இவனெனைப் பன்னாள் அழைப்பொழி யானென்
றெதிர்படுமே, 237

துறக்கப் படாத உடலைத் துறந்துவெந்
தூதுவரோ(டு)
இறப்பன் இறந்தால் இருவிசும் பேறுவன்
ஏறிவந்து
பிறப்பன் பிறந்தாற் பிறையணி வார்சடைப்
பிஞ்ஞகன்பேர்
மறப்பன்கொ லோஎன்றென் னுள்ளங் கிடந்து
மறுகிடுமே. 238

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

ஐந்தாம் திருமுறை

கோயில் திருக்குறுந்தொகை

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கும் மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே. 239

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே. 240

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாகக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ. 241

திருமறைக்காடு திருக்குறுந்தொகை

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 242

அரக்க னைவிர லால்அடர்த் திட்டநீர்
இரக்க மொன்றுலீர் எம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க இக்கத வந்திறப் பிம்மினே. 243

Koviloor Digital Library

திருஇன்னம்பர் திருக்குறுந்தொகை

என்னி லாரும் எனக்கினி யாரில்லை
என்னி லும்இனி யானொரு வன்னுளன்
என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே. 244

தொழுது தூமலர் தூவித் துதித்துநின்
றழுது காமுற் றரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக் கின்னம்பர்ஈ சனே. 245

திருவேட்களம் திருக்குறுந்தொகை

நன்று நாடொறும் நம்வினை போயறும்
என்றும் இன்பந் தழைக்க இருக்கலாம்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே. 246

வேட்க ளத்துறை வேதியன் எம்மிறை
ஆக்க ளேறுவர் ஆனைஞ்சு மாடுவர்
பூக்கள் கொண்டவன் பொன்னடி போற்றினால்
காப்பர் நம்மைக் கறைமிடற் றண்ணலே. 247

திருவாய்மூர் திருக்குறுந்தொகை

எங்கே யென்னை இருந்திடந் தேடிக்கொண்(டு)
அங்கே வந்தடை யாளம் அருளினார்
தெங்கே தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனார தென்கொலோ. 248

Koviloor Digital Library

மன்னு மாமறைக் காட்டு மணாளனார்
உன்னை யுன்னி உறங்குகின் றேனுக்குத்
தன்னை வாய்மூர்த் தலைவனா மாசொல்லி
என்னை வாவென்று போனார தென்கொலோ 249

தஞ்சே கண்டேன் தரிக்கிலா தாரென்றேன்
அஞ்சேல் உன்னை அழைக்கவந் தேனென்றார்
உஞ்சே னென்றுகந் தேயெழுந் தோட்டந்தேன்
வஞ்சே வல்லரே வாய்மூர் அடிகளே. 250

கழியக் கண்டிலேன் கண்ணெதி ரேகண்டேன்
ஒழியப் போந்திலேன் ஒக்கவே ஓட்டந்தேன்
வழியிற் கண்டிலேன் வாய்மூர் அடிகள்தம்
சுழியிற் பட்டுச் சுழல்கின்ற தென்கொலோ. 251

பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு
வாடி வாட்டந் தவிர்ப்பார் அவரைப்போல்
தேடிக் கொண்டு திருவாய்மூர்க் கேயெனா
ஓடிப் போதிங் கொளித்தவா றென் கொலோ. 252

திருக்கோழம்பம் **திருக்குறுந்தொகை**

முன்னை நான்செய்த பாவம் முதலறப்
பின்னை நான்பெரி தும்மருள் பெற்றதும்
அன்ன மார்வயற் கோழம்பத் துள்ளமர்
பின்னல் வார்சடை யானைப் பிதற்றியே. 253

Koviloor Digital Library

திருப்பூவனூர் — திருக்குறுந்தொகை

பூவ னூர்ப்புனி தன்திரு நாமந்தான்
நாவில் நூறுநூ றாயிரம் நண்ணினார்
பாவ மாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்க ளாவரே. 254

திருமங்கலக்குடி — திருக்குறுந்தொகை

மஞ்சன் வார்கடல் சூழ்மங் கலக்குடி
நஞ்ச மாரமு தாக நயந்துகொண்(டு)
அஞ்சு மாடல் அமர்ந்தடி யேனுடை
நெஞ்ச மாலய மாக்கொண்டு நின்றதே. 255

திருச்சேறை — திருக்குறுந்தொகை

என்ன மாதவஞ் செய்தனை நெஞ்சமே
மின்னு வார்சடை வேத விழுப்பொருள்
செந்நெ லார்வயற் சேறையுட் செந்நெறி
மன்னு சோதிநம் பால்வந்து வைகவே. 256

திருவான்மியூர் — திருக்குறுந்தொகை

விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்ட நாயகன் தன்னடி சூழ்மின்கள்
பண்டு நீர்செய்த பாவம் பறைந்திடும்
வண்டு சேர்பொழில் வான்மியூர் ஈசனே. 257

திருச்சிராப்பள்ளி — திருக்குறுந்தொகை

அரிச்சி ராப்பகல் ஐவரால் ஆட்டுண்டு
சுரிச்சி ராதுநெஞ் சேயொன்று சொல்லக்கேள்

Koviloor Digital Library

திருச்சி ராப்பள்ளி யென்றலுந் தீவினை
நரிச்சி ராது நடக்கும் நடக்குமே. 258

திருமருகல் திருக்குறுந்தொகை

பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே. 259

பாடங் கொள்பனு வல்திறங் கற்றுப்போய்
நாடங் குள்ளன தட்டிய நாணிலீர்
பாடஞ் சூழ்மரு கற்பெரு மான்திரு
வேடங் கைதொழ வீடெளி தாகுமே. 260

ஆதி மாமலை அன்றெடுத் தான்இற்றுச்
சோதி யென்றலுந் தொல்லருள் செய்திடும்
ஆதி யான்மரு கற்பெரு மான்திறம்
ஓதி வாழ்பவர் உம்பர்க்கும் உம்பரே. 261

தனித் திருக்குறுந்தொகை

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே. 262

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்

Koviloor Digital Library

நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே. 263

நடலை வாழ்வுகொண் டென்செய்திர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே. 264

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேஇரை தேடி அலமந்து
காக்கைக் கேஇரை ஆகிக் கழிவரே, 265

குறிக ளும் அடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியி லீர்மன மென்கொல் புகாததே. 266

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே. 267

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பர் அவர் தம்மை நாணியே. 268

விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்.

Koviloor Digital Library

உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே. 269

தனித் திருக்குறுந்தொகை

ஞானத் தால் தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தால் தொழு வேனுனை நானலேன்
ஞானத் தால் தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாய்உனை நானுந் தொழுவனே. 270

கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுளன் நாமுளோம்
எற்றுக் கோநம னால்முனி வுண்பதே. 271

மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈசனெ னுங்கனி
இனிது சாலவும் ஏசற்ற வர்கட்கே. 272

காலபாசத் திருக்குறுந்தொகை

கண்டு கொள்ளரி யானைக் கனிவித்துப்
பண்டு நான்செய்த பாழிமை கேட்டிரேல்
கொண்ட பாணி கொடுகொட்டி தாளங்கைக்
கொண்ட தொண்டரைத் துன்னிலுஞ் சூழலே 273

நடுக்கத் துள்ளும் நகையுளும் நம்பர்க்குக்
கடுக்கக் கல்ல வடமிடு வார்கட்குக்
கொடுக்கக் கொள்க எனவுரைப் பார்களை
இடுக்கண் செய்யப் பெறீரிங்கு நிற்குமே. 274

Koviloor Digital Library

கார்கொள் கொன்றைக் கடிமலர்க் கண்ணியான்
சீர்கொள் நாமஞ் சிவனென் றரற்றுவார்
ஆர்க ளாகினு மாக அவர்களை
நீர்கள் சாரப் பெறீரிங்கு நீங்குமே. 275

சாற்றி னேன்சடை நீண்முடிச் சங்கரன்
சீற்றங் காமன்கண் வைத்தவன் சேவடி
ஆற்ற வுங்களி பட்ட மனத்தராய்ப்
போற்றி யென்றுரைப் பார்புடை போகலே. 276

இறையென் சொல்மற வேல்நமன் தூதுவீர்
பிறையும் பாம்பு முடைப்பெரு மான்தமர்
நறவம் நாறிய நல்நறுஞ் சாந்திலும்
நிறைய நீறணி வாரெதிர் செல்லலே. 277

வாம தேவன் வளநகர் வைகலும்
காம மொன்றில ராய்க்கை விளக்கொடு
தாமம் தூபமும் தண்நறுஞ் சாந்தமும்
ஏமு மும்புனை வாரெதிர் செல்லலே. 278

படையும் பாசமும் பற்றிய கையினீர்
அடையன் மின்நம தீசன் அடியரை
விடைகொ ளூர்தியி னான்அடி யார்குழாம்
புடைபு காதுநீர் போற்றியே போமினே. 279

விச்சை யாவதும் வேட்கைமை யாவதும்
நிச்சல் நீறணி வாரை நினைப்பதே
அச்ச மெய்தி அருகணை யாதுநீர்
பிச்சை புக்கவன் அன்பரைப் பேணுமே. 280

Koviloor Digital Library

இன்னங் கேண்மின் இளம்பிறை சூடிய
மன்னன் பாதம் மனத்துட னேத்துவார்
மன்னும் அஞ்செழுத் தாகிய மந்திரம்
தன்னி லொன்றுவல் லாரையுஞ் சாரலே. 281

மற்றுங் கேண்மின் மனப்பரிப் பொன்றின்றிச்
சுற்றும் பூசிய நீற்றொடு கோவணம்
ஒற்றை யேறுடை யானடி யேயலால்
பற்றொன் றில்லிகள் மேற்படை போகலே. 282

அரக்கன் ஈரைந் தலையுமோர் தாளினால்
நெருக்கி யூன்றியிட் டான்தமர் நிற்கிலும்
சுருக்கெ னாதங்குப் பேர்மின்கண் மற்றுநீர்
சுருக்கெ னிற்சுட ரான்கழல் சூடுமே. 283

பாவநாசத் திருக்குறுந் தொகை

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகடல் ஓதநீ ராடிலென்
எங்கும் ஈச னெனாதவர்க் கில்லையே. 284

ஆதிபுராணத் திருக்குறுந் தொகை

வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதின் நாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயகன் ஆதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே. 285

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

ஆறாந் திருமுறை

கோயில் பெரிய திருத்தாண்டகம்

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 286

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 287

திருக்காளத்தி திருத்தாண்டகம்

நாரணன்காண் நான்முகன்காண் நால்வே தன்காண்
ஞானப் பெருங்கடலோர் நாவாய் அன்ன

Koviloor Digital Library

பூரணன்காண் புண்ணியன்காண் புராணன் தான்காண்
புரிசடைமேற் புனலேற்ற புனிதன் தான்காண்
சாரணன்காண் சந்திரன்காண் கதிரோன் தான்காண்
தன்மைக்கண் தானேகாண் தக்கோர்க் கெல்லாம்
காரணன்காண் காளத்தி காணப் பட்ட
கணநாதன் காண்அவனென் கண்ணு ளானே. 288

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றி னுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யானவனென் கண்ணு ளானே. 289

திருநல்லூர் திருத்தாண்டகம்

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 290

Koviloor Digital Library

திருப்பூவணம் திருத்தாண்டகம்

பாராழி வட்டத்தார் பரவி யிட்ட
பன்மலரும் நறும்புகையும் பரந்து தோன்றும்
சீராழித் தாமரையின் மலர்க ளன்ன
திருந்தியமா நிறத்தசே வடிகள் தோன்றும்
ஓராழித் தேருடைய இலங்கை வேந்தன்
உடல்துணித்த இடர்பாவங் கெடுப்பித் தன்று
போராழி முன்ஈந்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 291

செறிகழலுந் திருவடியுந் தோன்றுந் தோன்றுந்
திரிபுரத்தை யெரிசெய்த சிலையுந் தோன்றும்
நெறியதனை விரித்துரைத்த நேர்மை தோன்றும்
நெற்றிமேல் கண்தோன்றும் பெற்றந் தோன்றும்
மறுபிறவி யறுத்தருளும் வகையுந் தோன்றும்
மலைமகளுஞ் சலமகளும் மலிந்து தோன்றும்
பொறியரவும் இளமதியும் பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 292

ஆங்கணைந்த சண்டிக்கும் அருளி யன்று
தன்முடிமேல் அலர்மாலை யளித்தல் தோன்றும்
பாங்கணைந்து பணிசெய்வார்க் கருளி யன்று
பலபிறவி அறுத்தருளும் பரிசுந் தோன்றும்
கோங்கணைந்த கூவிளமும் மதமத் தம்முங்
குழற்கணிந்த கொள்கையோடு கோலந் தோன்றும்
பூங்கணைவேள் உருவழித்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 293

Koviloor Digital Library

ஆரொருவர் உள்குவார் உள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்
வாருருவப் பூண்முலைநன் மங்கை தன்னை
மகிழ்ந்தொருபால் வைத்துகந்த வடிவுந் தோன்றும்
நீருருவக் கடலிலங்கை அரக்கர் கோனை
நெறுநெறென அடர்த்திட்ட நிலையுந் தோன்றும்
போருருவக் கூற்றுதைத்த பொற்புத் தோன்றும்
பொழில் திகழும்பூவணத்தெம் புனிதனார்க்கே. 294

திருவாலவாய் திருத்தாண்டகம்

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 295

திருமறைக்காடு திருத்தாண்டகம்

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்

Koviloor Digital Library

வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. 296

கள்ளி முதுகாட்டி லாடி கண்டாய்
காலனையுங் காலாற் கடந்தான் கண்டாய்
புள்ளி யுழைமானின் தோலான் கண்டாய்
புலியுரிசே ராடைப் புனிதன் கண்டாய்
வெள்ளிமிளிர் பிறைமுடிமேற் சூடி கண்டாய்
வெண்ணீற்றான் கண்டாய்நஞ் செந்தின் மேய
வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. 297

மூரி முழங்கொலிநீ ரானான் கண்டாய்
முழுத்தழல் போல்மேனி முதல்வன் கண்டாய்
ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்
இன்னடியார்க் கின்பம் விளைப்பான் கண்டாய்
ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணா மலையுறையெம் அண்ணல் கண்டாய்
வாரி மதகளிறே போல்வான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. 298

ஆடல்மால் யானை யுரித்தான் கண்டாய்
அகத்தியான் பள்ளி யமர்ந்தான் கண்டாய்
கோடியான் கண்டாய் குழகன் கண்டாய்
குளிராரூர் கோயிலாக் கொண்டான் கண்டாய்

Koviloor Digital Library

நாடிய நன்பொருள்க ளானான் கண்டாய்
நன்மையோ டிம்மைமற் றம்மை யெல்லாம்
வாடிய வாட்டந் தவிர்ப்பான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. 299

மூலநோய் தீர்க்கும் முதல்வன் கண்டாய்
முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்
ஆலின்கீழ் நால்வர்க் கறத்தான் கண்டாய்
ஆதியும் அந்தமு மானான் கண்டாய்
பால விருத்தனு மானான் கண்டாய்
பவளத் தடவரையே போல்வான் கண்டாய்
மாலைசேர் கொன்றை மலிந்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. 300

திருவாரூர் — திருத்தாண்டகம்

உயிரா வணமிருந் துற்று நோக்கி
உள்ளக் கிழியி னுருவெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிரா வணமேறா தானே றேறி
அமரர்நா டாளாதே ஆரூ ராண்ட
அயிரா வணமே யென்னம்மா னேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லா தாரே. 301

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்

Koviloor Digital Library

பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே. 302

பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை அரித்துத் தின்பீர்க்
கில்லையே கிடந்துதான் யானேல் வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்ண லாரூர்த்
தடங்கடலைத் தொடர்ந்தோரை யடங்கச் செய்யும்
எம்மான்ற னடித்தொடர்வா னுழிதர் கின்றேன
இடையிலேன் கெடுவீர்கள் இடறேன் மின்னே. 303

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே. 304

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்

Koviloor Digital Library

சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்ளே னென்றும்
புற்றரவக் கச்சார்ந்த புனிதா வென்றும்
பொழிலாரூ ராவென்ற போற்றா நில்லே. 305

புலன்கள் ஐந்தால் ஆட்டுண்டு போது போக்கிப்
புறம்புறமே திரியாதே போது நெஞ்சே
சலங்கொள்சடை முடியுடைய தலைவா என்றுந்
தக்கன்செய் பெருவேள்வி தகர்த்தா யென்றும்
இலங்கையர்கோன் சிரநெரித்த இறைவா வென்றும்
எழிலாரூ ரிடங்கொண்ட எந்தாய் என்றும்
நலங்கொளடி என்தலைமேல் வைத்தாய் என்றும்
நாடோறும் நவின்றேத்தாய் நன்மை யாமே 306

புகையெட்டும் போக்கெட்டும் புலன்க ளெட்டும்
பூதலங்க ளவையெட்டும் பொழில்க ளெட்டும்
கலையெட்டுங் காப்பெட்டுங் காட்சி யெட்டுங்
கழற்சே வடியடைந்தார் களைக ணெட்டும்
நகையெட்டும் நாளெட்டும் நன்மை யெட்டும்
நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலர்க ளெட்டும்
திகையெட்டுந் தெரிப்பதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே. 307

திருவையாறு **திருத்தாண்டகம்**

ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே

Koviloor Digital Library

வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 308

கனத்தகத்துக் கடுஞ்சுடராய் நின்றாய் நீயே
கடல்வரைவான் ஆகாய மானாய் நீயே
தனத்தகத்து தலைகலனாக் கொண்டாய் நீயே
சார்ந்தாரைத் தகைந்தாள வல்லாய் நீயே
மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய் நீயே
மலர்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
சினத்திருத்த திருநீல கண்டன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 309

எல்லா வுலகமு மானாய் நீயே
யேகம்பம் மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 310

திருஒற்றியூர் **திருத்தாண்டகம்**

வெள்ளத்தைச் செஞ்சடைமேல் விரும்பி வைத்தீர்
வெண்மதியும் பாம்பு முடனே வைத்தீர்

Koviloor Digital Library

கள்ளத்தை மனத்தகத்தே கரந்து வைத்தீர்
கண்டார்க்குப் பொல்லாது கண்டீ ரெல்லே
கொள்ளத்தான் இசைப்பாடிப் பலியுங் கொள்ளீர்
கோளரவுங் குளிர்மதியுங் கொடியுங் காட்டி
உள்ளத்தை நீர்கொண்டீர் ஓத லோ வா
வொளிதிகழு மொற்றியூ ருடைய கோவே. 311

திருவாவடுதுறை — திருத்தாண்டகம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதீ மிக்க
உருவேஎன் னுறவேஎன்ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 312

மாற்றேன் எழுத்தஞ்சும் என்றன் நாவின்
மறவேன் திருவருள்கள் வஞ்ச நெஞ்சின்
ஏற்றேன் பிறதெய்வம் எண்ணா நாயேன்
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
மேற்றான் நீ செய்வனகள் செய்யக் கண்டு
வேதனைக்கே இடங்கொடுத்து நாளு நாளும்
ஆற்றேன் அடியேனை அஞ்சே லென்னாய்
ஆடுவதண் டுறையுறையும் அமர ரேறே. 313

Koviloor Digital Library

திருப்புள்ளிருக்குவேளூர் திருத்தாண்டகம்

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைக் கைக்கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே 314

திருக்கன்றாப்பூர் திருத்தாண்டகம்

விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற் பூசி
வெளுத்தமைந்த கீளொடுகோ வணமுந் தற்றுச்
செடியுடைய வல்வினைநோய் தீர்ப்பாய் என்றுஞ்
செல்கதிக்கு வழிகாட்டுஞ் சிவனே யென்றுந்
துடியனைய இடைமடவாள் பங்கா வென்றுஞ்
சுடலைதனில் நடமாடுஞ் சோதீ யென்றுங்
கடிமலர்தூய்த் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே.
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 315

எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவ ரென்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்

Koviloor Digital Library

கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 316

ஐயினால் மிடறடைப்புண் டாக்கை விட்டு
ஆவியார் போவதுமே அகத்தார் கூடி
மையினாற் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்தி லிடுவதன்முன் மதியஞ் சூடும்
ஐயனார்க் காளாகி அன்பு மிக்கு
அகங்குழைந்து மெய்யரும்பி அடிகள் பாதம்
கையினால் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 317

திருவானைக்கா — திருத்தாண்டகம்

எத்தாயார் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவ ரில்லை
சிறுவிரகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய்கேனே 318

திருக்கச்சியேகம்பம் — திருத்தாண்டகம்

பரந்தவன்காண் பல்லுயிர்க ளாகி யெங்கும்
பணிந்தெழுவார் பாவமும் வினையும் போகத்
துரந்தவன்காண் தூமலரங் கண்ணி யான்காண்
தோற்ற நிலையிறுதிப் பொருளாய் வந்த

Koviloor Digital Library

மருந்தவன்காண் வையங்கள் பொறைதீர்ப் பான்காண்
மலர்தூவி நினைந்தெழுவா ருள்ளம் நீங்கா
திருந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண் அவனென் எண்ணத் தானே. 319

தாயவன்காண் உலகிற்குத் தன்னொப் பில்லாத்
தத்துவன்காண் மலைமங்கை பங்கா வென்பார்
வாயவன்காண் வரும்பிறவி நோய்தீர்ப் பான்காண்
வானவர்க்குந் தானவர்க்கும் மண்ணு ளோர்க்குஞ்
சேயவன்காண் நினைவார்க்குச் சித்த மாரத்
திருவடியே உள்நினைந் தெழுவா ருள்ளம்
ஏயவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண் அவனென் எண்ணத்தானே. 320

முந்தைகாண் மூவரினும் முதலா னான்காண்
மூவிலைவேல் மூர்த்திகாண் முருக வேட்குத்
தந்தைகாண் தண்கடமா முகத்தி னாற்குத்
தாதைகாண் தாழ்ந்தடியே வணங்கு வார்க்குச்
சிந்தைகாண் சிந்தாத சித்தத் தார்க்குச்
சிவனவன்காண் செங்கண்மால் விடையொன் றேறும்
எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே 321

திருவாலங்காடு — திருத்தாண்டகம்

ஒன்றாவுலகனைத்து மானார் தாமே
ஊழிதோ றூழி உயர்ந்தார் தாமே

Koviloor Digital Library

நின்றாகி யெங்கும் நிமிர்ந்தார் தாமே
நீர்வளிதீ யாகாச மானார் தாமே
கொன்றாடுங் கூற்றை யுதைத்தார் தாமே
கோலப் பழனை உடையார் தாமே
சென்றாடு தீர்த்தங்க ளானார் தாமே
திரு வாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 322

திருச்செங்காட்டங்குடி திருத்தாண்டகம்

கல்லாதார் மனத்தணுகாக் கடவுள் தன்னைக்
கற்றார்கள் உற்றோருங் காத லானைப்
பொல்லாத நெறியுகந்தார் புரங்கள் மூன்றும்
பொன்றிவிழ அன்றுபொரு சரந்தொடானை
நில்லாத நிணக்குரம்பைப் பிணக்கம் நீங்க
நிறைதவத்தை அடியேற்கு நிறைவித் தென்றுஞ்
செல்லாத செந்நெறிக்கே செல்விப் பானைச்
செங்காட்டாங் குடியதனிற் கண்டேன் நானே 323

திருச்சிவபுரம் திருத்தாண்டகம்

வானவன்காண் வானவர்க்கும் மேலா னான்காண்
வடமொழியுந் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்கான் ஆனைந்தும் ஆடி னான்காண்
ஐயன்காண் கையிலனல் ஏந்தி யாடும்
கானவன்காண் கானவனுக் கருள்செய் தான்காண்
கருதுவார் இதயத்துக் கமலத் தூறும்
தேனவன்காண் சென்றடையாச் செல்வன் றான்காண்
சிவனவன்காண் சிவபுரத்தெஞ் செல்வன் தானே 324

Koviloor Digital Library

பாரவன்காண் பாரதனிற் பயிரா னான்காண்
பயிர்வளக்குந் துளியவன் காண் துளியில் நின்ற
நீரவன்காண் நீர்சடைமேல் நிகழ்வித் தான்காண்
நிலவேந்தர் பரிசாக நினைவுற் றேங்கும்
பேரவன்காண் பிறையெயிற்று வெள்ளைப் பன்றிப்
பிரியாது பலநாளும் வழிபட் டேத்தும்
சீரவன் காண் சீருடைய தேவர்க் கெல்லாஞ்
சிவனவன்காண் சிவபுரத்தெஞ் செல்வன் தானே. 325

திருவோமாம்புலியூர் திருத்தாண்டகம்

ஆராரும் மூவிலைவேல் அங்கை யானை
அலைகடல்நஞ் சயின்றானை அமர ரேத்தும்
ஏராரும் மதிபொதியுஞ் சடையி னானை
எழுபிறப்பும் எனையாளா வுடையான் தன்னை
ஊராரும் படநாகம் ஆட்டு வானை
உயர்புகழ்சேர் தரும்ஓமாம் புலியூர் மன்னுஞ்
சீராரும் வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தினேனே 326

பலவகைத் திருத்தாண்டகம்

நேர்ந்தொருத்தி ஒருபாகத் தடங்கக் கண்டு
நிலைதளர ஆயிரமா முகத்தி னோடு
பாய்ந்தொருத்தி படர்சடைமேற் பயிலக் கண்டு
படஅரவும் பனிமதியும் வைத்த செல்வர்
தாந்திருத்தித் தம்மனத்தை ஒருக்காத் தொண்டர்
தனித்தொருதண் டூன்றிமெய் தளரா முன்னம்
பூந்துருத்தி பூந்துருத்தி என்பீ ராகில்
பொல்லாப் புலால்துருத்தி போக்க லாமே. 327

Koviloor Digital Library

ஐத்தானத் தகமிடறு சுற்றி ஆங்கே
அகத்தடைந்தால் யாதொன்று மிடுவா ரில்லை
மைத்தானக் கண்மடவார் தங்க ளோடு
மாயமனை வாழ்க்கை மகிழ்ந்து வாழ்வீர்
பைத்தானத் தொண்மதியும் பாம்பும் நீரும்
படர்சடைமேல் வைத்துகந்த பண்பன் மேய
நெய்த்தானம் நெய்த்தானம் என்பீ ராகில்
நிலாவாப் புலால் தானம் நீக்க லாமே. 328

பொய்யாறா வாறே புனைந்து பேசிப்
புலர்ந்தெழுந்த காலைப் பொருளே தேடிக்
கையாறாக் கரண முடையோ மென்று
களித்த மனத்தராய்க் கருதி வாழ்வீர்
நெய்யாறா ஆடிய நீல கண்டர்
நிமிர்புன் சடைநெற்றிக் கண்ணர் மேய
ஐயாறே ஐயாறே என்பீ ராகில்
அல்லல்தீர்ந் தமருலகம் ஆள லாமே. 329

இழவொன்று தாமொருவர்க் கிட்டோன் றியார்
ஈன்றெடுத்த தாய்தந்தை பெண்டீர் மக்கள்
கழனங்கோ வையாதல் கண்டுந் தேறார்
களித்த மனத்தராய்க் கருதி வாழ்வீர்
அழனம்மை நீக்குவிக்கும் அரைய னாக்கும்
அமலருகம் ஆள்விக்கும் அம்மான் மேய
பழனம் பழனமே என்பீ ராகில்
பயின்றெழுந்த பழவினைநோய் பாற்ற லாமே 330

Koviloor Digital Library

ஊற்றுத் துறையொன்ப துள்நின் றோரீர்
    ஒக்க அடைக்கும்போ துணர மாட்டீர்
மாற்றுத் துறைவழிகொண் டோடா முன்னம்
    மாய மனைவாழ்க்கை மகிழ்ந்து வாழ்வீர்
வேற்றுத் தொழில் பூண்டார் புரங்கள் மூன்றும்
    வெவ்வழல்வாய் வீழ்விக்கும் வேந்தன் மேய
சோற்றுத்துறை சோற்றுத்துறை என்பீ ராகில்
    துயர் நீங்கித் தூநெறிக்கட் சேர லாமே. 331

கலஞ்சுழிக்குங் கருங்கடல்சூழ் வையந் தன்னிற்
    கள்ளக் கடலி லழுந்தி வாளா
நலஞ்சுழியா எழுநெஞ்சே இன்பம் வேண்டில்
    நம்பன்றன் அடியிணைக்கே நவில்வா யாகில்
அலஞ்சுழிக்கும் மன்னாகந் தன்னான் மேய
    அருமறையோ டாறங்க மானார் கோயில்
வலஞ்சுழியே வலஞ்சுழியே என்பீ ராகில்
    வல்வினைகள் தீர்ந்துவா னாள லாமே. 332

தண்டி குண்டோ தரன்பிங் கிருடி
    சார்ந்த புகழ்நந்தி சங்கு கன்னன்
பண்டை உலகம் படைத்தான் தானும்
    பாரை அளந்தான் பல்லாண் டிசைப்பத்
திண்டி வயிற்றுச் சிறுகட் பூதஞ்
    சிலபாடச் செங்கண் விடையொன் றூர்வான்
கண்டியூர் கண்டியூர் என்பீ ராகிற்
    கடுகநும் வல்வினையைக் கழற்ற லாமே. 333

Koviloor Digital Library

விடமூக்கப் பாம்பேபோற் சிந்தி நெஞ்சே
வெள்ளேற்றான் தன்தமரைக் கண்ட போது
வடமூக்க மாமுனிவர் போலச் சென்று
மாதவத்தார் மனத்துளார் மழுவாட் செல்வர்
படமூக்கப் பாம்பணையிற் பள்ளி யானும்
பங்கயத்து மேலயனும் பரவிக் காணாக்
குடமூக்கே குடமூக்கே என்பீ ராகில்
கொடுவினைகள் தீர்ந்தரனைக் குறுக லாமே. 334

தண்காட்டாச் சந்தனமுந் தவள நீறுந்
தடையணுகுங் குறுங்கொன்றை மாலை சூடிக்
கண்காட்டாக் கருவரைபோ லனைய காஞ்சிக்
கார்மயிலஞ் சாயலார் கலந்து காண
எண்காட்டாக் காடங் கிடமா நின்று
எரிவீசி இரவாடும் இறைவர் மேய
வெண்காடே வெண்காடே என்பீ ராகில்
வீடாத வல்வினை நோய் வீட்ட லாமே. 335

தந்தையார் தாயா ருடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமா கிதற்கேதும் மகிழ வேண்டாம்
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவுந் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்க லாமே. 336

Koviloor Digital Library

மாதா பிதாவாகி மக்க ளாகி
மறிகடலும் மால்விசும்புந் தானே யாகிக்
கோதா விரியாய்க் குமரி யாகி
கொல்புலித்தோ லாடைக் குழக னாகிப்
போதாய மலர்கொண்டு போற்றி நின்று
புனைவார் பிறப்பறுக்கும் புனித னாகி
யாதானு மெனநினைந்தார்க் கெளிதே யாகி
அழல் வண்ண வண்ணர் தாம் நின்ற வாறே. 337

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய் மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமுஞ் சுற்றமும் ஒரூ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே. 338

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடங்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே 339

Koviloor Digital Library

நற்பதத்தார் நற்பதமே ஞான மூர்த்தீ
நலஞ்சுடரே நால்வேதத் தப்பால் நின்ற
சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய் இதுவுன் தன்மை
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சத் தன்னுள்
நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவேன் அல்லேன்
கனகமா மணிநிறத்தெங் கடவுளானே. 340

திருகோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா ஊரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா ஊரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா ஊரும்
விதானமும் வெண்கொடியு மில்லா ஊரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா ஊரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே. 341

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட்டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ என்னிற்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே. 342

Koviloor Digital Library

நின்னாவார் பிறரன்றி நீயே யானாய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து மானாய்
மன்னானாய் மன்னவர்க்கோ ரமுத மானாய்
மறைநான்கு மானாய்ஆறங்க மானாய்
பொன்னானாய் மணியானாய் போக மானாய்
பூமிமேல் புகழ்தக்க பொருளே உன்னை
என்னானாய் என்னானாய் என்னி னல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்து கேனே. 343

அத்தாவுன் அடியேனை அன்பா லார்த்தாய்
அருள்நோக்கில் தீர்த்தநீ ராட்டிக் கொண்டாய்
எத்தனையும் அரியநீ எளியை யானாய்
எனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்
பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்
பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தா யன்றே
இத்தனையும் எம்பரமோ ஐய ஐயோ
எம்பெருமான் திருக்கருணை இருந்த வாறே. 344

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோல மாய
நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானி யல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன் நடுவே நின்ற
விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தேன் அல்லேன்
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேச வல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே ஈய மாட்டேன்
என்செய்வான் தோன்றினேன் ஏழை யேனே. 345

Koviloor Digital Library

சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெல்லாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம் வணங்குங் கடவு ளாரே. 346

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே. 347

என்றும்நாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிரா வாரு மில்லை
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோஞ்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினாற் குடையுடையோ மல்லோ மன்றே
உறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்
பொன்றினார் தலைமாலை அணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே. 348

Koviloor Digital Library

திருப்புகலூர் திருத்தாண்டகம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 349

ஒருவரையும் அல்லா துணரா துள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவறுத்தாய்க் கில்லேன் ஏலக்
கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுந்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 350

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

சுந்தரமூர்த்தி நாயனார்
ஏழாந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

திருவெண்ணெய் நல்லூர் — பண்-இந்தளம்

பித்தாபிறை சூடிபெரு மானே அரு ளாளா
எத்தால்மற வாதேநினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள்
அத்தா உனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே. 351

நாயேன்பல நாளும்நினைப் பின்றி மனத்துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாஅருள் பெற்றேன்
வேயார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
ஆயாஉனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே. 352

காரூர்புனல் எய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புகழ் எய்தித்திகழ் பன்மாமணி உந்திச்
சீரூர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
ஆரூரன்எம் பெருமாற்காள் அல்லேன் எனல் ஆமே. 353

திருக்கழிப்பாலை — பண்-நட்டராகம்

எங்கே னும்இருந்துன் அடியேன் உனைநினைந்தால்
அங்கே வந்தென்னோடும் உடனாகி நின்றருளி

Koviloor Digital Library

இங்கே என்வினையை அறுத்திட் டெனையாளும்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே. 354

திருமழபாடி

பண்-நட்டராகம்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழ பாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே

ஏரார் முப்புரமும் எரியச்சிலை தொட்டவனை
வாரார் கொங்கையுடன் மழபாடியுள் மேயவனைச்
சீரார் நாவலர் கோன் ஆரூரன் உரைத்ததமிழ்
பாரோர் ஏத்தவல்லார் பரலோகத் திருப்பாரே. 356

திருக்குருகாவூர்

பண்-நட்டராகம்

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநன் கலனாக உண்பலிக் குழல்வானே
காடுநின் இடமாகக் கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 357

பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய் கடுவிருட் சுடரொப்பாய்
மண்ணிடை அடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 358

Koviloor Digital Library

திருக்கருப்பறியலூர் பண்-நட்டராகம்

முட்டாமே நாள்தோறும் நீர்மூழ்கிப்
பூப்பறித்து மூன்றுபோதும்
கட்டார்ந்த இண்டைகொண்ட டிச்சேர்த்து
மந்தணர்தங் கருப்பறியலூர்க்
கொட்டாட்டுப் பாட்டாகி நின்றானைக்
குழகனைக் கொகுடிக்கோயில்
எட்டான மூர்த்தியை நினைத்தபோ
தவர்நமக் கினியவாறே. 359

திருப்புகலூர் பண்-கொல்லி

தம்மையேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்வினுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறுங் கூறையும்
ஏத்தலாம்இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுறவில்லையே. 360

திருவதிகைத் திருவீரட்டானம் பண்-கொல்லிக் கௌவாணம்

தம்மானை அறியாத சாதியார் உளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற் கொள்
கைம்மாவின் உரியானைக் கரிகாட்டில் ஆடல் (விகிர்தன்
உடையானை விடையானைக் கறைகொண்டகண்டத்

Koviloor Digital Library

தெம்மான்றன் அடிக்கொண்டென் முடிமேல்வைத்திடு
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன் (மென்னும்
எம்மானை எறிகெடில வடவீரட் டானத்
துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே.

திருத்தொண்டத்தொகை பண்-கொல்லிக் கௌவாணம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக்கு குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 362

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 363

Koviloor Digital Library

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே. 364

திருநாகைக்காரோணம் பண்-கொல்லிக் கௌவாணம்

பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும்
பற்றாய பெருமானே மற்றாரை யுடையேன்
உண்மயத்த வுமக்கடியேன் குறைதீர்க்க வேண்டும்
ஒளிமுத்தம் பூணாரம் ஒண்பட்டும் பூவும்
கண்மயத்த கத்தூரி கமழ்சாந்தும் வேண்டும்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரென்
றண்மயத்தா லணிநாவ லாரூரன் சொன்ன
அருந்தமிழ்கள் இவைவல்லார் அமருலகாள் பவரே.

திருப்பாண்டிக் கொடுமுடி பண்-பழம்பஞ்சரம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்

Koviloor Digital Library

கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
    யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்மறக்கினும்
    சொல்லும் நாநமச்சி வாயவே. 366

திருவாரூர் பண் - பழம்பஞ்சுரம்

ஏழிசையாய் இசைப்பயனாய்
    இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும்
    துரிசுகளுக் குடனாகி
மாழை ஒண்கண் பரவையைத்தந்
    தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
    என்ஆரூர் இறைவனையே. 367

திருவொற்றியூர் பண் - தக்கேசி

அழுக்கு மெய்கொடுன் திருவடி அடைந்தேன்
    அதுவும் நான்படப் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
    பிழைப்பன் ஆகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்
    மற்று நான்அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
    ஒற்றி யூரெனும் ஊருறை வானே. 368

Koviloor Digital Library

திருப்புன்கூர் பண் - தக்கேசி

அந்த ணாளன்உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீஎனை நமன்தமர் நலியின்
இவன்மற் றென்அடி யான்என விலக்கும்
சிந்தை யால்வந்துன் திருவடி அடைந்தேன்
செழும்பொழில்திருப் புன்கூர் உளானே. 369

நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தன்
நாவினுக் கரையன் நாளைப்போ வானும்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லனென் றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூரு ளானே. 370

திருக்கழுமலம் பண் - தக்கேசி

சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை வகுத்துத்
தன்அருள் தந்தஎம் தலைவனை மலையின்
மாதினை மதித்தங்கொர் பால்கொண்ட மணியை
வருபுனல் சடையிடை வைத்த எம்மானை

Koviloor Digital Library

ஏதிலென் மனத்துக்கோர் இரும்புண்ட நீரை
    எண்வகை ஒருவனை எங்கள்பி ரானைக்
காதில்வெண் குழையனைக் கடல்கொள மிதந்த
    கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே. 371

மற்றொரு துணைஇனி மறுமைக்குங் காணேன்
    வருந்தலுற் றேன்மற வாவரம் பெற்றேன்
சுற்றிய சுற்றமுந் துணை என்று கருதேன்
    துணைஎன்று நான் தொழப் பட்டஒண் சுடரை
முத்தியும் ஞானமும் வானவர் அறியா
    முறைமுறை பலபல நெறிகளுங் காட்டிக்
கற்பனை கற்பித்த கடவுளை அடியேன்
    கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. 372

வரும்பெரும் வல்வினை என்றிருந் தெண்ணி
    வருந்தலுற் றேன்மற வாமனம் பெற்றேன்
விரும்பிஎன் மனத்திடை மெய்குளிர்ப் பெய்தி
    வேண்டிநின் றேன்தொழு தேன்விதி யாலே
அரும்பினை அலரினை அமுதினைத் தேனை
    ஐயனை அறவன்என் பிறவிவேர் அறுக்கும்
கரும்பினைப் பெருஞ்செந்நெல் நெருங்கிய கழனிக்
    கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. 373

திருவாரூர் பண் - தக்கேசி

பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
    போக முந்திரு வும்புணர்ப் பானைப்

Koviloor Digital Library

பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
எம்மா னைஎளி வந்தபி ரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
ஆரூரானை மறக்கலு மாமே. 374

திருக்கச்சியேகம்பம் பண் - தக்கேசி

ஆலந் தான்உகந் தமுதுசெய் தானை
ஆதி யைஅம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 375

திருக்கோலக்கா பண் - தக்கேசி

நாளும் இன்னிசை யால்தமிழ் பரப்பும்
ஞான சம்பந்த னுக்குல கவர்முன்
தாளம் ஈந்தவன் பாடலுக் கிரங்கும்
தன்மை யாளனை என்மனக் கருத்தை
ஆளும் பூதங்கள் பாடநின் றாடும்
அங்க ணன்தனை எண்கணம் இறைஞ்சும்
கோளி லிப்பெருங் கோயிலு ளானைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. 376

Koviloor Digital Library

வடதிருமுல்லைவாயில் பண் - தக்கேசி

திருவுமெய்ப் பொருளுஞ் செல்வமுமெனக்குன்
சீருடைக் கழல்களென் றெண்ணி
ஒருவரை மதியா துறாமைகள் செய்து
மூடியு முறைப்பனாய்த் திரிவேன்
முருகமர் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் வாயினா லுன்னைப்
பரவிடு மடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 377

கூடிய இலயஞ் சதிபிழை யாமைக்
கொடியிடை யுமையவள் காண
ஆடிய அழகா அருமறைப் பொருளே
அங்கணா வெங்குற்றா யென்று
தேடிய வானோர் சேர்திரு முல்லை
வாயிலாய் திருப்புகழ் விருப்பால்
பாடிய வடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 378

மற்றுநான் பெற்ற தார்பெற வல்லார்
வள்ளலே கள்ளமே பேசிக்
குற்றமே செயினுங் குணமெனக் கொள்ளுங்
கொள்கையான் மிகைபல செய்தேன்
செற்றுமீதோடுந் திரிபுரமெரித்த
திருமுல்லை வாயிலா யடியேன்
பற்றிலே னுற்ற படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 379

Koviloor Digital Library

திருவாரூர் பண்-புறநீர்மை

அந்தியு நண்பகலு மஞ்சுப தஞ்சொல்லி
முந்தி யெழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு வாரூர்புக்
கெந்தை பிரானாரை யென்றுகொ லெய்துவதே. 380

நின்ற வினைக்கொடுமை நீங்க இருபொழுதும்
துன்று மலரிட்டுச் சூடும் வலஞ்செய்து
தென்றன் மணங்கமழுந் தென்திரு வாரூர்புக்
கென்றன் மனங்குளிர வென்றுகொ லெய்துவதே 381

திருவாரூர் பண்-செந்துருத்தி

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே. 382

திருநொடித்தான்மலை பண்-பஞ்சமம்

தானெனை முன் படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள மத்தயானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை உத்தமனே 383

Koviloor Digital Library

இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னை மத்தயானை அருள்புரிந்து
மந்திர மாமுனிவர் இவனார்என எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித்தான்மலை உத்தமனே. 384

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசகர்

எட்டாந் திருமுறை

திருவாசகம்

சிவபுராணம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
ஏக னநேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங் குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி

Koviloor Digital Library

சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத வின்ப மருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற வதனால்
அவனரு ளாலே யவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய வுரைப்பனியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்து ளோங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே

Koviloor Digital Library

அஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லா யனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருடருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பில்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோறு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்கு
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே

Koviloor Digital Library

நேச வருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே யளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட வெந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தில்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே

Koviloor Digital Library

தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து. 385

திருச்சதகம்

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்த்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னுங்
கைதா னெகிழ விடேனுடையா
யென்னைக் கண்டுகொள்ளே. 386

யானேதும் பிறப்பஞ்சே
னிறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன்
மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயு மலர்க்கொன்றைச்
சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநா
ளென்றென்றே வருந்துவனே. 387

Koviloor Digital Library

ஆமாறுன் றிருவடிக்கே
யகங்குழையே னன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன்
புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் றிருக்கோயில் தூகேன்
மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்
சதுராலே சார்வானே. 388

திருவம்மானை

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியமண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானாய். 389

திருத்தெள்ளேணம்

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநா மறியவோ ரந்தணனா யாண்டுகொண்டான்
ஒருநாம மோருருவ மொன்றுமில் லாற்காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங்கொட்டாமோ. 390

வான்கெட்டு மாறாத மாய்த்தழனீர் மண்கெடினுந்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்
கூன்கெட்டுயிர்கெட் டுணர்வுகெட்டெ னுள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

Koviloor Digital Library

திருச்சாழல்

கோயில் சுடுகாடு கொல்புலித்தோ னல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடீ
தாயு மிலி தந்தையிலி தான்றனிய னாயிடினும்
காயி லுலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ. 392

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதாயிருநிலத்தோர்
விண்பாலியோகெய்தி வீடுவர்காண் சாழலோ. 393

திருப்பூவல்லி

இணையார் திருவடி யென்றலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்க ளத்தனையுந் துறந்தொழிந்தேன்
அணையார் புனற்றில்லை யம்பலத்தே யாடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ. 394

அடைக்கலப்பத்து

செழுக்கமலத் திரளனநின் சேவடி சேர்ந்தமைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியேன் உடையாயுன் னடைக்கலமே 395

வாழாப்பத்து

பாரொடு விண்ணாய்ப் பரந்தவெம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்

Koviloor Digital Library

சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகே னார்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ யருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே. 396

அருட்பத்து

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே யடியே னாதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே. 397

திருக்கழுக்குன்றப் பதிகம்

பிணக்கிலாத பெருந்துறைப் பெரு மானுன்
னாமங்கள் பேசுவார்க்
கிணக்கி லாத தோரின்பமே வருந்
துன்பமே துடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்துமேல் விளையாம
லென்வினை யொத்தபின்
கணக்கி லாத்திருக்கால நீவந்து
காட்டினாய் கழுக் குன்றிலே. 398

Koviloor Digital Library

பிடித்த பத்து

உம்பர்கட் கரசே யொழிவற நிறைந்த
யோகமே யூற்றையேன் றனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 399

அம்மையே யப்பா வொப்பிலா மணியே
அன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 400

திருப்படையாட்சி

கண்க ளிரண்டு மவன்கழல் கண்டு களிப்பன வாகாதே
காரிகை யார்கடம் வாழ்விலென்வாழ்வுகடைப்படு மாகாதே
மண்களில்வந்து பிறந்திடு மாறு மறந்திடு மாகாதே
மாலறி யாமலர்ப் பாத மிரண்டும் வணங்குது மாகாதே
பண்களி கூர்தரு பாடலொடாடல் பயின்றிடு மாகாதே

Koviloor Digital Library

பாண்டிநன் னாடுடை யான்படையாட்சிகள் பாடுது மாகாதே
விண்களிகூர் வதோர்வேதகம் வந்து வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படு மாயிடிலே 401

அச்சோப் பதிகம்

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. 402

திருச்சிற்றம்பலம்

திருமாளிகைத் தேவர்

ஒன்பதாம் திருமுறை

திருவிசைப்பா

கங்கைகொண்ட சோளேச்சரம்

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி யென்மனம் புகுந்த
எளிமையை யென்றுநான் மறக்கேன்
முன்னமால் அறியா வொருவனாம் இருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோள்
கன்னலே தேனே யமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

Koviloor Digital Library

சேந்தனார்
திருவிசைப்பா
திருவீழிமிழலை

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே. 404

திருப்பல்லாண்டு
கோயில்

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்அடி
யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே. 406

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

திருமூலதேவ நாயனார்

பத்தாந் திருமுறை

திருமந்திரம்

சிவனொ டொக்குந்தெய்வந் தேடினு மில்லை
அவனொடொப் பாரிங் கியாவரு மில்லை
புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே. 407

வேதங்க ளாட மிகுவா கமமாடக்
கீதங்க ளாட கிளரண்ட மேழாடப்
பூதங்க ளாடப் புவன முழுதாட
நாதங்கொண் டாடினான் ஞானனந் தக்கூத்தே. 408

எங்குந் திருமேனி யெங்குஞ் சிவசக்தி
எங்குஞ் சிதம்பர மெங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமா யிருத்தலா லெங்கெங்குந்
தங்குஞ் சிவனருட் டன்விளை யாட்டதே. 409

சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே. 410

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

காரைக்காலம்மையார்

பதினோராந் திருமுறை

அற்புதத்திருவந்தாதி

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரு நெறிபணியா ரேனுஞ் - சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு. 411

காலனையும் வென்றோம் கடுநரகங்கை கழன்றோம்
மேலை இருவினையும் வேரறுத்தோம் - கோல
அரணார் அவிந்தழிய வெந்தீயம் பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து 412

சேரமான் பெருமாள் நாயனார்

பொன்வண்ணத் தந்தாதி

பொய்யா நரகம்புகினுந் துறக்கினும் புகினும்புக்கிங்
குய்யா வுடம்பினொ டூர்வ நடப்ப பறப்ப என்று
நையா விளியினும் நானிலம் ஆளினும் நான்மறைசேர்
மையார் மிடற்றான் அடிமற வாவரம் வேண்டுவனே 413

நக்கீர தேவர்

கைலைபாதி காளத்திபாதி அந்தாதி

வாயிலே வைக்கு மளவின் மருந்தாகித்
தீய பிறவிநோய் தீர்க்குமே - துயவே
கம்பெருமா தேவியொடு மன்னு கயிலாயத்
தெம்பெருமான் ஓரஞ் செழுத்து. 414

Koviloor Digital Library

நக்கீரதேவ நாயனார்

திருவலஞ்சுழி மும்மணிக்கோவை

வணங்குவதும் வாழி நெஞ்சே புணர்ந்துடன்
பொருகடல் முகந்து கருமுகிற் கணம்நற்
படவர வொடுங்க மின்னிக் குடவ்ரைப்
பொழிந்து கொழித்திழி அருவி குணகடல்
மடுக்குங் காவிரி மடந்தை வார்புனல்
உடுத்த மணிநீர் வலஞ்சுழி
அணிநீர்க் கொன்றை அண்ணல தடியே. 415

பட்டினத்துப் பிள்ளையார்

திருக்கழுமல மும்மணிக்கோவை

நக்கீர தேவர்

போதும் பெறாவிடிற் பச்சிலை யுண்டு புனலுண்டெங்கும்
ஏதும் பெறாவிடில் நெஞ்சுண்டன் றேயிணை யாகச்செப்புஞ்
சூதும் பெறாமுலைப் பங்கர்தென்தோணி புரேசர்வண்டின்
தாதும் பெறாத அடித்தா மரைசென்று சார்வதற்கே. 416

Koviloor Digital Library

திருசிற்றம்பலம்

சேக்கிழார் நாயனார்

பன்னிரண்டாம் திருமுறை

பெரிய புராணம்

உல கெலாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்திவ ணங்குவாம். 417

ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா ஏக மாகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி. 418

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி 419

என்றும் இன்பம் பெருகும் இயல்பினோ(டு)
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி உலகெலாம். 420

திருச்சிற்றம்பலம்

..OK AND
A. No. 1958
... KOV

Koviloor Digital Library

Koviloor Digital Library

ANANDA CASSETTES

அடியார்களின் ஆன்மப் பசியாற்றும் அட்சயப் பாத்திரமான வாரியார் சுவாமிகளின் 100 வகையான கேசட்டுகள்

வசிகரமிக்க வழக்காடு மன்றங்கள்
கர்ணன் குற்றவாளியா?
தர்மன் குற்றவாளியா?
கண்ணதாசன் கவியரசரா?
பாடம் புகட்டும் பட்டிமன்றம்
இன்றைய வாழ்வுக்கு வழிகாட்டி
இராமாயணமா? மகாபாரதமா?

வெளியிடுவோர் :

ஆனந்தா கேசட்ஸ்

ஆடியோ & வீடியோ

107, சிங்கண்ண செட்டித் தெரு
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002
போன் : 835666